உண்மை

இங்கர்சால்



19

R34wM33
N52
120713

உண்மை

மூலம்: இங்கர்சால்

தமிழ்: ஊடுருவி

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு: 15
முதற் பதிப்பு: நவம்பர் 1952
உரிமை உடையது

விலை ரூபாய் 1—0—0
அட்டை பைண்ட் 1—8—0

விற்பனை நிலையம்:
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனு பஜார், சென்னை - 1

உண்மை உரை

உண்மையை, உண்மையாக உலகிற்கு எடுத்துக் கூறிய ஒப்பற்ற மனிதர் "இங்கர்சால்". அவர் கூறிய உண்மைகளுக்கு "உண்மை" என்ற மகுடமிட்டிருக்கிறார் அறிஞர் இங்கர்சால். அந்த உயரிய ஆராய்ச்சி நூலைத் தமிழாக்கித் தந்தவர் நண்பர் "ஊடுருவி". இந்த உண்மை என்னும் நூலைத் தமிழகம் படித்து, உண்மையை நன்கு தெரிந்து கொள்ளும் என்று நாங்கள் உண்மையாக நம்பியதால், இதனை உங்கள் முன் அனுப்புகிறோம். படித்து உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்!

வணக்கம்

கலைமன்றத்தினர்.

ஆசிரியரின் பிற நூல்கள்

—o—

கலிங்கப்போர்
(சரித்திர வரலாறு)

அரசாங்கம் (லெனின்)

கடவுள் (இங்கர்சால்)

மக்கள் உரிமை ,,

கோயில்கள் ,,

ரோமியோ-ஜூலியத்.
(ஷேக்ஸ்பியர்)

மாஜி கடவுள்கள் (ஆராய்ச்சி)

வீரமங்கை ஜோன் (வரலாறு)

உலகைத் திருத்திய
உத்தமர்கள் (1-ம் பாகம்)

ஒளி விளக்குகள் (2-ம் பாகம்)

லைலா - மஜ்னு (கதை)

நாநா (எமிலிஜோலா)

ரஸ்புடீன் (வரலாறு)

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

1

பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக, எண்ணற்ற முயற்சிகளைச் செய்து தன் அறிவைச் சிறுகச் சிறுக வளர்த்துக் கொண்டான் மனிதன். தனக்கு இருந்த நான்கு கால்களில் இரண்டைக் கைகளாக மாற்றிக் கொண்டான். அவனுடைய மன எழுச்சிகளைத் திருப்தி செய்து கொண்டான்; ஆசைகளை நிறைவேற்றிக்கொண்டான். அவனுடைய அறிவிலே படர்ந்திருந்த அறியாமை இருளைச் சிந்தனை என்னும் ஒளிக் கற்றைகள்மூலம் பிரகாச மடையச் செய்தான்.

மேலும் அவன் வேகமாக முன்னேற்ற மடைய முடியாமல் அறியாமை தடுத்தது; அச்சம் தடுத்தது; குற்றங்கள் தடுத்தன. என்றாலும், மறுக்க முடியாத உண்மையை மனிதன் கண்டபின் அந்தத் தடைகளை மீறி முன்னேறினான்.

எண்ணற்ற ஆண்டுகளாக அவன் உணர்ந்தும், ஊர்ந்தும், மல்லாடியும், மேலேறியும், வழுக்கியும் அறிவொளியை நோக்கிச் சிறுகச் சிறுக ஆனால் நிச்சயமாகச்

சென்றான். அப்படி அவன் செல்லும் போது, போப் பாண்டவர்களால் தடுக்கப் பட்டான்; மதக் குருக்களால், தாமதப் படுத்தப் பட்டான்; தீர்க்கதரிசிகளால் ஏமாற்றப் பட்டான்; குறிச் சொல்வோரால் வஞ்சிக்கப் பட்டான். அன்றியும், மத போதகர்களாலும், கிறித்துவப் பாதிரிமார்களாலும் தவறான பாதையில் நடத்திச் செல்லப் பட்டான். பிசாசுகளின் பெயரால் பயமுறுத்தப் பட்டான்; பூதங்களின் பெயரால் அச்சுறுத்தப் பட்டான். முடிமன்னர்களாலும், தலைவர்களாலும், அடிமை யாக்கப் பட்டான். பலிபீடங்களாலும் ஆட்சி பீடங்களாலும் கொள்ளையடிக்கப் பட்டான். கல்வியின் பெயரால் அவனுடைய மூளை குற்றங்களாலும், அற்புதங்களாலும், புனைந்துரைகளாலும் நடைமுறைக்கு ஒத்து வராத நிகழ்ச்சிகளாலும், இகழ்ச்சிகளாலும் நிரப்பப் பட்டது.

மதம் அவனுக்குத் தாழ்மையைக் கற்பித்தது; தான் தோன்றித் தனத்தைக் கற்பித்தது; விருப்பையும் வெறுப்பையும் போதித்தது; மன்னிப்பையும், பழிவாங்கும் தன்மையையும் பயில்வித்தது.

ஆனல் அந்தக் கல்வி நிலைக்க முடியவில்லை. உலகம் மாறிக்கொண் டிருக்கிறது. மனிதர்களாகிய நாம் கொடிய வேதங்களாலும், ஆகமங்களாலும், காட்டுமிராண்டித் தனமான மதக் கோட்பாடுகளாலும் மிகவும் சோர்ந்துவிட் டிருக்கின்றோம். குற்றங்கள் நிரம்பிய,

இருள் படர்ந்த வாழ்வில் நாம் வாழ்கிறோம் என்றும் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

குற்றங்களும், இருளும் படர்ந்த வாழ்வு வாழும் நாம், நமது வாழ்வில் அறிவொளியைக் காண முயல் கின்றோம். அதைக் காட்டிலும் பெரியதும் முக்கிய மானதும் வேறொன்றுமில்லை என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நாம் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும், உண்மை வாழ்வு வாழ வேண்டும்.

உண்மை, உலகத்தின் அறிவுச் செல்வம்! உண் மையைத் தேடுவதுதான் மிக மிக உயர்ந்த செயல்!

உண்மையும், சத்தியமும்தான் முன்னேற்றத்தின் அடிப்படையும், அதன் மீது எழுப்பப்பட்ட அழகான கட்டிடத்தின் ஒளி மிகுந்த உச்சியு மாகும்!

உண்மை மகிழ்ச்சியின் தாய்! உண்மை மனிதனை நாகரிக மாக்குகிறது; உண்மை மனிதனைப் பரிசுத்தப் படுத்துகிறது. உண்மை மனிதனை உயர்த்துகிறது. ஆன்மாவின் பேராவல் சத்தியத்தை, உண்மையைக் காண்பதுதான்.

உண்மை மனிதனுக்கு நன்மை உண்டாக உதவு கிறது! உண்மை வாள் மட்டுமல்ல, அதன் உறையு மாகும். அந்த உண்மைதான் உயிரின் தூய்மையான ஒளி!

அதனால் உண்மையைக் காண்கின்ற மனிதன் ஒளியை உண்டாக்குகின்றவனாகின்றான்.

உண்மையைச் சோதனையால் காண முடியும். ஆராய்ச்சியால் அறிய முடியும். சிந்தனையால் கண்டு பிடிக்க முடியும். அதனால் ஒவ்வொரு மனிதனும் அவன் திறமை இடம் தரும் அளவுக்கு ஆராய்ச்சி செய்ய அனுமதிக்கப் படவேண்டும். இவ்வுலக இலக்கியம் அவ்வாராய்ச்சியாளனுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும். அவனை எவையும் தடைசெய்யக் கூடாது; எந்தவிதமான திரைக்கும் அவனை மறைக்க அனுமதிக்கக் கூடாது.

மனித அறிவில் அறிந்து கொள்ளுவதற்குமுடியாத அளவுக்குப் பரிசுத்தமான, தூய்மையான பொருள் ஒன்றும் இருக்க முடியாது மாத்திரமல்ல; நிச்சயமாகக் கிடையாது. ஆகவே, ஒவ்வொரு மனிதனும் அவனுடைய முடிவை அடைவதற்கு அனுமதியுங்கள். எண்ணத்தை வெளியிடும் உரிமையை வழங்குங்கள்.

"உன் அறிவின் வழி சென்று முடிவை அறியாதே; உன் மனதில் எழும் எண்ணங்களை வெளியில் சொல்லாதே. அப்படிச் செய்தால் தண்டிப்பேன்" என்று எவனொருவன் பயமுறுத்துகின்றானோ அவன் யார் தெரியுமா? மனித இனத்தின் பகைவன்; மக்கள் குல வைரி; முற்போக்காளர்களின் எதிரி; என்பதை மறந்து விடாதீர்கள்.

எதையும் ஆராய்ந்து பார்க்கும் ஆராய்ச்சியாளனிடம் சென்று, "எதையும் நீ ஆராயாதே! நான் சொல்வதைப்போல் நீ கேள்; உனக்கு என்றென்றும் அழி

யாத பேரின்பத்தைத் தேடித் தருகிறேன்" என்று வாக்களிக்கின்றுனே அவன்; அவனுடைய தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் துரோகி யாவான்.

உண்மையான ஆராய்ச்சி நடத்த வேண்டுமானுல், மனிதனுக்கு, கடவுளிடத்தி லிருக்கும் அச்சம் அகல வேண்டும்; மனிதர்களிடத்துக் கொண்டுள்ள பயம் நீங்க வேண்டும். அவனுக்குச் சர்வ சுதந்திரம் நிச்சயமாக இருக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான ஆராய்ச்சி நடத்த முடியும்.

மனிதன் தன் ஆராய்ச்சிகளையும், சோதனைகளையும் சுய சிந்தனை என்னும் வெளிச்சத்தின் துணை கொண்டு நிகழ்த்த வேண்டும்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் தனக்குத் தானே உண்மையானவனுக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தன் அறிவு என்னும் ஆராய்ச்சிக் கூடத்தில், உலகக் கோட்பாடுகள் என்று கூறப்பட்டவைகளை, அலசி அலசி ஆராய்ச்சி செய்ய வேண்டும் அப்போது அவனுடைய சிந்தனைக்கொத்த சத்தியம் (உண்மை) அவனுக்குத் துணை செய்வதுடன் அஃதே ஆசிரியனுகவும் இருந்து வழி காட்டும்.

இவ்விதமாகச்சென்று உண்மையைக் காண வேண்டும். இதுதான் நேர்மையான வழி; இந்த வழியில் சென்ருல்தான் அறிவுத் தெளிவு ஏற்படும்; இதற்குத்

தான் மனிதத் தன்மை என்றும் பெயர்; மனிதனுடைய உரிமையும் அதுதான்.

மாதாகோயில்களின் ஆணைகளுக்கும், மதக் குருமார்களின் கட்டளைகளுக்கும்; கட்சிகளின் கட்டுதிட்டங்களுக்கும்; மன்னர்களின் சட்டத்திற்கும்; கடவுள்களின் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுவது, மனிதன் தன்னுடைய அருமையான பொக்கிஷமாகிய சிந்தனைச் சக்தியை இழந்து விடுவது, மனிதன் தானே அடிமையாக மாறுவதாகும்.

ஆராய்வதும், சிந்திப்பதும், மனிதனின் உரிமை; அதுமட்டு மல்ல; உயர்ந்த கடமையு மாகும்.

இந்த அருமையான மனித உரிமையை எவனொருவன் பயங்காட்டியும், பலாத்காரத்தைப் பயன்படுத்தியும் பறித்துக் கொள்கின்றானோ, அவன் தன் சகாக்களாகிய மனிதர்களின், தோழர்களின் புகழைக் குறைத்து அவர்களை அடிமைக ளாக்குகின்றான்.

மனிதன் அவனுடைய உரிமையைச் சாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். அவனுடைய ஆன்மாவின் பரிபூரண உரிமையை ஒரு விலையுயர்ந்த நகையினைக் காப்பாற்றுவதுபோல் பாதுகாக்க வேண்டும்.

மனிதனின் அறிவுக்கு எட்டிய கேள்விகளை, வெறுப்பும், விருப்பும் அற்று ஆராய வேண்டும்; ஆசை, அச்சம் ஆகியவைகளை நீக்கியே ஆராயவேண்டும். அமைதியுடன் ஆராய வேண்டும். அவனுடைய நோக்கமெல்

லாம் உண்மையைக் காண்பதிலேயே முனைந்து நிற்க வேண்டும்.

சிந்தனைக்கு இடம் கொடுத்து மனிதன் ஆராயும் போது, சத்தியம், அதாவது உண்மை ஆபத்து அற்றது என்பதை அவன் உணர்ந்து கொள்வான். மன எழுச்சியாலும், ஆர்வத்தாலும் மாற்ற முடியாத நேர்மை மிக்க தராசிலே சாட்சிகளையும், வாதங்களையும் அவன் எடை போட்டுப் பார்க்க வேண்டும். அவனுடைய பகுத்தறிவு, உண்மை என்று நிச்சயிக்காத எந்த கட்டளைகளையும், வழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும் அவன் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

எதையும் பகுத்துப் பார்க்கும் அறிவாளிகளுக்குத் தனி யுலகுண்டு; அந்த உலகில் அவன்தான் அரசன். அவனுடைய ஆத்மாவே அந்த உலகின் மணிமுடியை அவனுக்கு அணிவிக்க வேண்டும்.

அந்த ஆட்சியின எல்லையிலிருந்து பலாத்காரம், அச்சம் ஆகிய விரோதிகளை அவன் வெளியேற்ற வேண்டும்.

புரட்சி, தற்புகழ்ச்சி, ஆத்திரம், அகங்காரம், இகழ்ச்சி என்னும் இவைகள் உண்மைக்கு எதிரிகள்; முன்னேற்றத்திற்கு விரோதிகள்!

உண்மையைத் தேடி அலைகின்ற உண்மை மனிதன், பழைமையை, தொன்றுதொட்டிருந்த காரணத்திற்காக ஏற்றுக்கொள்ள மாட்டான்; புதுமையை, புதியதாய்த்

தோன்றிய காரணத்திற்காக வெறுத்துத் தள்ளமாட்டான்.

இறந்துவிட்ட நமது முன்னோர்கள் புனிதமானவர்கள்—என்ற காரணத்திற்காக அவர்கள் கூறியவற்றை உண்மை ஆராய்ச்சிக்காரன் ஏற்றுக்கொள்ள மாட்டான்; இன்று உயிரோடு இருப்பவர்கள் என்ற காரணத்திற்காக அவர்களை மறுத்துப் பேசவும் தயங்க மாட்டான்.

ஆசிரியர்களுக்குத் தரும் மதிப்பைக் காட்டிலும், நேர்மை கலந்த உண்மை உடையவர்களின் வார்த்தைக்கு அதிக மதிப்புண்டு!

அவன் அதாவது உண்மையாளன், அரசனாக இருக்கலாம்; அல்லது அடிமையாக இருக்கலாம்—தத்துவ வாதியாக இருக்கலாம்—அல்லது தாழ்ந்த வேலைக்காரனாக இருக்கலாம். அவர்கள் பேசும் வார்த்தைகளில் அடங்கியுள்ள உண்மையே முக்கியம்; ஆள் முக்கியமல்ல. யார் கூறினாலும் சரி. பகுத்தறிவுக்கு ஒத்தனவாயிருந்தால் ஒப்புக் கொள்ளப் படும். முரண்பட்டிருந்தால் நிச்சயமாக நிராகரிக்கப் படும்.

பெருமையும் சிறுமையும் ஆளைப்பொறுத்த தல்ல; அறிவைப் பொறுத்ததே.

பொய்மை இருக்கிறதே அதுதான் புகழின் உதவியை நாடும். பாதிரிகளின் மூடிகளையும்—மன்னர் மகுடங்களையும் விரும்பி விரையும்.

விவேகிகள் ஆடம்பரத்தை வேண்டாதவர்கள் - அஞ்சாத நெஞ்சும் அவர்களுக்குண்டு!

உண்மையை விசுவாசிக்கின்றவர்கள் - அறிவுள்ள வர்கள் - படை பலம் கண்டு அஞ்சார்! மெஜாரிட்டி யாளரின் பலத்தைக் கண்டு கலங்கார்!

அவர்கள் எதை உண்மை என்று நம்புகின்றார் களோ அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆன்றோர்களின் நோக்கங்களையும், அபிப்பிராயங் களையும், ஆசாரங்களையும், மதக் கோட்பாடுகளையும் - அவர்களின் சித்தாந்தங்களையும், தன் அறிவின் துணை கொண்டு பகுத்துப் பகுத்துப் பார்ப்பார்கள். பகுத்தறி வுக்கு - முரணாக - ஒவ்வாதவை யாயின், அவர்கள் அதனை ஒத்துக் கொள்ளவே மாட்டார்கள்.

உண்மையைத் தேடி அலைகிறார்கள். அந்த உண்மை எவ்வளவு தொல்லை தருவதா யிருந்தாலும்- வெறுப்பை உண்டாக்குவதா யிருந்தாலும், முன்னமே கண்டுபிடிக் கப்பட்ட எண்ணங்களுக்குப் புறம்பானதாயிருந்தாலும், அந்த உண்மையைக் கண்டவுடன் மிகுந்த மகிழ்ச்சி யுடனும், திருப்தியுடனும் ஏற்றுக் கொள்ளுகின் றார்கள்.

இந்த ஒரு வழியைத்தான், விவேகம் மிக்க உண்மை மனிதர்கள் கடைப்பிடிக்க முடியும். இவ் வழியைத் தவிர, வேறு வழி அவர்களுக்குத் திருப்தி யளிக்காது.

மக்கள் முயற்சிக்கு எட்டக்கூடிய எல்லாத் துறைகளிலும், காரண காரியங்களை - உண்மையை - தேடியலையும் மனிதர்கள் இருக்கின்றனர்.

அரசியல் வாதிகள்,. இந்த உலகின் சரித்திரத்தைப் படித்து, தங்களால் முடிந்தவரை எல்லா நாடுகளின் விவரங்களையும், நிகழ்ச்சிகளையும் ஒன்று சேர்த்துப் பார்க்கின்றனர். இறந்த காலங்களில் நாடுகள் நிகழ்த்திய தவறுகளைத் தெரிந்து கொள்ளுகின்றனர். அழிந்த தேசங்களின் அழிவுக்குக் காரணங்கள் எவை என்பதையும் தெரிந்து கொள்ளுகின்றனர். அதன் பிறகு அந்தத் தவறுகளை, அழிவுப் பாதைகளை நோக்கிச் செல்லும் திட்டங்களைப் போக்கப் புதிய முறையைக் கண்டு பிடித்துத் தன் தாய் நாட்டைக் காப்பாற்றிக் கொள்ள வழி செய்து வைக்கின்றனர்.

சில ஆராய்ச்சியாளன் உண்மையை அறியும் பொருட்டுப் பாறைகளைத் துளைத்துப் பார்க்கின்றான். பிரபஞ்சங்களின் இரகசியங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு மலைகளின் உச்சியில் ஏறுகின்றான். தணிந்துள்ள எரிமலைகளின் வாய்க்குள் சென்று ஆராய்ச்சி நடத்துகின்றான். தீவாந்திரங்களுக்குச் செல்கின்றான். கண்டங்களுக்குப் பயண மாகின்றான். ஏன்? இந்த உலக வரலாற்றின் உண்மையை ஓரளவேனும் அறிவதற்கு.

இரசாயன ஆராய்ச்சிகளின் சோதனைக் கருவிகளின் உதவியால் எண்ணற்ற ஆராய்ச்சிகள் நடத்துகின்றான். பொருள்களின் குணங்களைக் காண்கின்றான். இயற்கை

யின் இணைப்பைப் பிரிக்க முயல்கின்றான். இயற்கையின் இரகசியங்களை ஓரளவேனும் அறிந்து கொள்ள ஆசைப் படுகின்றான்.

பெரிய பொறியியல் அறிஞர்கள் உண்மை என்னும் உலகிலேயே வாழ்வை நடத்துகின்றனர். அவர்கள் இயற்கையின் உதவியைக் கொண்டே, இயற்கையின் சக்தியைப் பயன் படுத்திக் கொள்ள முயல்கின்றனர். ஆம்! அவர்கள் உண்மையை - முழு உண்மையை அறிய விரும்புகின்றார்கள்.

சிற்பியும் உண்மை ஆராய்ச்சியிலேயே பொழுது போக்குகின்றான். இயற்கையின் சக்தியை அறிகின்றான். அவைகளைத் தன் வயப்படுத்தவும் சிற்ப சாஸ்திரிகள் முயல்கின்றனர். அவர்களுக்கும் உண்மைதான் தேவை.

மருத்துவர்களும், இரண சிகிச்சை நிபுணர்களும் கருத்தூன்றிய கவனிப்பையும்,சோதனையையும்,சிந்தனையையும்தான் சார்ந்திருக்கின்றார்கள். அவர்கள் அற்புதமான மூளையை உடைய தசை, இரத்தம், நரம்பு முதலியவற்றால் ஆக்கப்பட்ட மனித உடம்போடு தொடர்புடையவர்கள். அவர்களும் உண்மை ஒன்றைத் தான் விரும்புகிறார்கள்.

விஞ்ஞானப் பாதையில் நடப்பவர்களும், உண்மையை அறிய முயன்று கொண்டுதான் இருக்கின்றார்கள். இதைப் போலவே, பல வகைப்பட்ட ஆராய்ச்சியாளர்களும் உண்மை இருக்கும் இடத்தைத் தேடித் தேடி அலைந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

அந்த நல்லவர்களின் வேலே உண்மையைக் காண்பதே. அவர்கள் கண்களும், கருத்தும் செல்லும் இடங்களிலெல்லாம் உண்மை யிருக்கிறதோ என்றுதான் பார்க்க முயல்கின்றனர். அப்படி அவர்கள் அறிவுக்குத் தெளிவாகப்பட்ட உண்மைகளே உலக மக்களுக்குக் கூறிக்கொண்டே யிருக்கின்றனர். இதுதான் அவர்களுடைய வாழ்வின் குறிக்கோள்.

அவர்களின் துணிவு, தைரியம் அவர்களின் அறிவுக்குச் சமமானது என்று சொல்ல வேண்டும்.

இறந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் என்ன சொல்லியிருந்தாலும், நிகழ்காலத்து மக்கள் எதை நம்பி வந்தாலும், அதற்காகக் கவலைப் படாமல், தங்களுக்குத் தெரிந்ததை அவர்கள் வெளியிடுவார்கள். ஆம்! அவர்கள் அறிந்த உண்மையை உலக மக்களுக்குக் கூறியே தீருவார்கள். அத்தகைய உள்ள உரம் அவர்களுக்கு மிகவும் அவசியம்.

உண்மையை அறிவதினுல், மனிதனுக்கு நன்மை ஏற்படுமானுல், அறிவுத் துறையில் உண்மையைக் காண்கின்ற மனிதன் அறிவுடையவனுகவும், நேர்மையாளனுகவும், பரோபகாரியாகவும் இருப்பது நல்லது. அப்படிப் பட்டவனுல் கண்டு பிடிக்கப்பட்ட உண்மையை மற்றவர்கள் தெரிந்துகொள்வது நல்லது.

ஒவ்வொரு மனிதனும் தன் மனத்தில் படும் உண்மை, எண்ணத்தை வெளியிடுவதற்குத் துணிவு

வேண்டும். அவ்விதம் உண்மையைக் கவனித்து வெளியிடுபவன் பொதுநல ஊழியன்.

உண்மையான அபிப்பிராயங்கள் கூறும் போது, அதைத் தடுக்க முயற்சி செய்பவர்கள் நாகரிகத்தின் எதிரிகள், உண்மையை வெளிப்படுத்த வேண்டாம் என்று தடுப்பவர்கள் நேர்மையின் விரோதிகள். ஏன் மனித இனத்தின் மாபெரும் சத்துருக்களாவர்.

தன் எண்ணத்தை மட்டும் வெளியிடும் உரிமை எனக்குண்டு என்று உரிமை பாராட்டிவிட்டு, மற்றவர்களுக்கு அந்த உரிமையை வழங்க மறுப்பவன், தற்புகழ்ச்சிக்காரன் மட்டுமல்ல; ஆணவத்தின் அதிகாரியும் கூட.

ஒரு சில விஷயங்களைப் புனிதமானதென்றும், அவைகளை ஆராய்ந்து பார்க்கக் கூடாதென்றும், சோதனையிடக் கூடாதென்றும் அந்த உரிமை மனிதனுக்கில்லையென்றும் சொல்கின்றனரே அதனை நாம் எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அவை புனிதமானவை என்று யாருக்குத்தெரியும்? அப்படிச் சொன்னவர்கள் யார்? நம்மால் உண்மையானவை என்று அறிய முடியாத எதுவும் நமக்கு எப்படிப் புனித மாகும்?

பல நூற்றுண்டுகளாகவே சுதந்திரமாக - வெளிப்படையாகப் பேசும் பேச்சுக்கள், தெய்வ தூஷணையானவை என்றும், கடவுளை அவமரியாதை செய்யும்

வார்த்தைகள் என்றும் எண்ணப்பட்டு வந்தன. நேர்மையைப் பேசுவது தேவநிந்தனை செய்வதாகவும் கருதப் பட்டு வந்தது. பல நூற்றாண்டுகளாக அறிஞர்களின் வாய்களுக்குப் பூட்டுப் போடப் பட்டன.

சத்தியத்தால் ஏற்றப்பட்டு, தைரியத்தால் மிக உயரத்தில் தூக்கப்பட்ட உண்மை விளக்கு குருதி நீரால் அணைக்கப் பட்டது.

உண்மை எப்போதும் வெளிப்படையான சுதந்திரப் பேச்சிலுள்ளது. அஃது ஆராய்ச்சிக் குரியது; அது காணப்பட்டு, அறியப் படுவது.

உண்மை, சுதந்திரத்தின் நண்பன். உண்மை, வாதம், நேர்மை, ஆகியவற்றின் தோழன்; ஆராய்ச்சி, துணிவு முகலியவற்றின் சுற்றமும் உண்மைதான்.

உண்மை-ஒளியை விரும்புகிறது; வெட்டவெளியையும் அது வெறுப்பதில்லை.

உண்மை - உணர்ச்சி, நீதி, சிந்தனை, உயர்ந்த மேலான கட்டங்கள், அறிவின் சக்தி ஆகியவற்றைக் கவர்கிறது.

உண்மை - மன எழுச்சியை அடக்குகிறது.

உண்மை - தடைகளை அழிக்கிறது.

உண்மை—சிந்தனைச் சுடரின் ஜோதியை வளர்க்கின்றது.

உண்மை—அறிவை அதிகப் படுத்துகின்றது.

உண்மை—மனிதனின் முகமனைக் கேட்காது; மனிதர்கள் கெஞ்ச வேண்டும் என்றும் விரும்பாது.

உண்மை—அறிவீனர்கள் செய்யும் வழிபாடுகளை விரும்பாது. மூடர்களின் வணக்கத்தையும் அஃது ஏற்காது. பயங்கொள்ளிகளின் பிரார்த்தனையையும் எதிர்பார்க்காது. மற்றும் வேறெந்தப் புகழுரைகளையும் அது விரும்பாது.

அந்த உண்மை—ஒவ்வொரு மனிதனிடமும் கீழ் கண்டவாறு விண்ணப்பிக்கிறது:—

"நீ சுயமாகச் சிந்தித்துப் பார். கடவுளைப்போல் நீயும் சுதந்திர முள்ளவனுயிரு! உன்னுடைய சீரிய குணத்தையும், உண்மையான எண்ணத்தையும், தைரியத்தையும் வளர்த்துக் கொள்" என்று வேண்டிக் கொள்ளுகிறது.

அன்புள்ளவர்களே! நாம் ஏன் உண்மையை நாட வேண்டும் என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு.

நாம் ஏன் உண்மையை நாட வேண்டும்?

நாம் எதற்காகப் பகுத்துப் பகுத்து ஆராய வேண்டும்?

நாம் சிந்திக்க வேண்டியதின் அவசியம் என்ன?

நாம் ஏன் உண்மையான அறிவாளியாகவும், உண்மையைப் பேசுபவர்களாகவும் இருக்க வேண்டும்?

நாம் ஏன் உண்மையான எண்ணங்களை வெளியிட வேண்டும்?

நாம் ஏன் நேர்மையான அபிப்பிராயங்களைச் சொல்ல வேண்டும்?

என்று கேட்கும் கேள்விகட் கெல்லாம் ஒரே பதில் தான் உண்டு. அதாவது, ''மனிதர்களின் முன்னேற்றத்திற்காக'' அல்லது மனித இனத்தின் நன்மைக்காக.

மூளையை விருத்தி செய்ய வேண்டும்; அறிவு வளர்க்கப்பட வேண்டும். மக்கள் சுயமாகச் சிந்திக்க வேண்டும்; தெளிவான பேச்சுக்களைச் சுதந்திரமாகப் பேச வேண்டும். எதையும் கண்ணை மூடிக்கொண்டு நம்பும் பழக்கம் ஒழிந்து, சிந்தித்தே எதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பகுத்து ஆராய்ந்து, தெளிந்த பின்னர் அல்லது எந்த விஷயங்களைப் பற்றிய முடிவும் ஏற்படக் கூடாது. இவற்றை உலகம் நன்கு உணர வேண்டும். இந்தப் பாடத்தை உலக மக்கள் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த வழிமுறைகளை மனிதன் தெரிந்து கொள்வதால், மனிதன் இயற்கையின் சக்தியை, வெல்ல முடியும். இயற்கையின் தடைகளை மீற முடியும். இவ் விதம் செய்வதால் மனிதன் பலவித நோய்களைப் போக்குவான். அல்லது நோய்கள் வராமல் தடுப்பான். வலியைக் குறைப்பான். வாழ்க்கையை நீட்டி உயர்த்தி வளப்படுத்துவான்.

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத உயர்ந்த இலட்சியங்களை வகுப்பான். எல்லா வழிகளிலும், அவனுடைய திறமையை அதிகப் படுத்துவான். தேவைகளைப் பூர்த்தி செய்வான். ஆசைகளை நிறைவேற்றுவான்.

அது மட்டுமா? ஆடை நெய்து தருவான்; வசதியுடன் வாழ நல்ல வீடு கட்டிக்கொடுப்பான்; பசியடங்க உணவு சமைத்து உதவுவான்; குளிர் போக்கும் தீயிற்கு விறகு சேர்த்துத் தருவான்; குடும்பத்துட னிருந்து இல்லறம் நடத்தத் தேவையான எல்லா வசதிகளையும் மக்களுக்குச் சுலபமாகக் கிடைக்கும்படி செய்வான்.

இந்த உலகத்தி லிருந்தே வறுமையை ஓட்டுவான்; தேவையைத் தந்து உதவுவான். குற்றங்களைக் களைவான்; கொடுமைகளை நீக்குவான்.

அவன் அச்சம் என்னும் விஷப் பாம்புகளை ஒழிப்பான்; மூடபக்தி - குருட்டு நம்பிக்கை என்னும் அரக்கர்களை அழிப்பான்.

அதன் பிறகு மக்கள் புத்தி கூர்மை யுள்ளவர்களாகவும், உண்மையாளர்க ளகவும், நேர்மையாளர்களாகவும், சாந்த சீலர்களாகவும், சுதந்திர முள்ளவர்களாகவும் நிம்மதியாக வாழ்வு நடத்தலாம்.

வான மண்டலங்களில் வீற்றிருக்கும் கடவுள்கள் முடிசாய்ந்து வீழ்வர்; மோட்சத்தின் அரசன் அரியாசனத்திலிருந்து இறக்கப் படுவான்.

நரகத்தில் நெருப்புகளைக் கக்கிக்கொண் டிருக்கும் கொடிய தீக்குழிகள், அணைந்து விடும்; நரகமும் அதனு டன் சேர்ந்து அழியும்.

பிச்சைக்கார சந்நியாசிகளும், பக்கிரிகளும், உண்மை யான உழைப்பாளர்களாக மாறுவார்கள். பூசாரி, புரோகிதர்களின் பொய் பித்தலாட்டங்கள் ஒழியும். பழைய புளுகுப் புராணப் பொய் மூட்டைகளின் மதிப் பும், பெருமையும் குறையும். மேலுலக வாழ்வுக்காக, இந்தப் பூவுலக வாழ்வை வீணுக்கும் தன்மை யிருக் காது. பயந்தவர்களிட மிருந்து வரி வசூலிக்கும் தன்மை யிருக்காது. புனிதந்துறைகள் புனிதமாகக் கருதப்படாது.

ஆனுல்;

கடவுளை நேசிப்பதற்குப் பதிலாக மக்கள் ஒரு வரை யொருவர் அன்புடன் நேசித்து இன்புறுவர். மனிதர்கள் நல்லவைகளையே செய்வார்கள். ஏன்? அந்த உலகத்தில் இன்பம் அடைவதற்காகவல்ல; இந்த நில உலகிலேயே இன்பம் காண!

நாம் கண்ணுல் காண முடிந்தது இயற்கை ஒன்று தான் என்று மனிதன் நினைக்கின்ருன். அதன் பிறகு அவனுடைய சொந்த முயற்சியால், நட்சத்திரங்களையும், மேகங்களையும் காண்கின்ருன்; மண்ணையும், பாறைகளை யும் பார்க்கின்ருன்; கடலையும், ஆற்றையும் ஆராய்கின் ருன்; மழையையும், நெருப்பையும் நோக்குகின்ருன்; கொடியையும், செடியையும், பூவையும், காயையும்

காண்கின்றான். பின்னர் அவைகள் கூறும் இரகசியங்கள் எவை என்பதைக் கண்டுபிடிப்பதில் முனைகின்றான். இவ்விதம் இப் பிரபஞ்சத்தின் இரகசியங்களை அறிந்து சந்தோஷமாய் வாழக் கற்பிக்கின்றான். இந்தப் படிப்பினை உலகம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உலகப் படிப்பினை மனிதன் படித்து அறிந்தவுடன், அவன் தன்னை அறிகின்றான். தனக்கு மேலாய் எந்த சக்தியும் நிச்சயமாக இல்லை என்பதை உணர்ந்து தெளிகின்றான். மனிதன் வாழ மனிதனையே நாட வேண்டும் என்பதையும் அறிகின்றான். இந்த உலகில் மனிதன்தான் மனிதனின் கடவுள் என்பதைச் சந்தேகமறத் தெரிகின்றான். அதாவது கடவுளை உண்டு பண்ணியவன் மனிதன் என்பதை அறிகின்றான். இயற்கைச் சக்தியைக் கடந்து எதுவும் இல்லை என்றும் தெரிந்து கொள்ளுகின்றான். மனிதன் மனிதனாலேயே முன்னேற்றப் பட்டான் என்றும் அவன் அறிந்து கொள்ளுகின்றான்.

பேச்சுரிமைக்கும், சிந்தனை உரிமைக்கும் எதிர் மறையான எந்த வாதங்களையும் மனதால்கூட எண்ண முடியாது. நாம் சுயமரியாதையைக் காப்பாற்றி, உள்ளத் தூய்மையைப் பத்திரமாகப் பாதுகாத்து வருவதை எவராலும் மறுக்க முடியாது.

* o *

2

அன்புள்ளவர்களே! நான் உங்களிடம் சொன்னவை அனைத்தும் உண்மையானவை. நல்ல சாட்சிகளுடன் கூடியவை.

" உரிமை சிறந்தது அல்ல; உரிமையைக் காட்டிலும் அடிமைத்தனம் சாலச் சிறந்தது" என்று சிலர் கூறுகின்றனர். அவர்களை நீங்கள் அறிய வேண்டு மல்லவா? கேளுங்கள்!

எல்லா போப்பாண்டவர்களும், பாதிரிகளும் கூறுகின்றனர். பழைமையில் மோகம் கொண்ட எல்லா மதக் கோயில்களும் கூறுகின்றன. அவைகள் மேலான கடவுளிடத்திலிருந்து ஓர் உயர்ந்த வேதத்தை (ஸ்மிருதியைப்) பெற்றிருப்பதாகக் கூறுகின்றன.

" இந்த உலகை ஒவ்வொரு மனிதனும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்; அதன் பிறகு தெளிய வேண்டும்; பின்னர் நம்ப வேண்டும்" என்று புரட்டஸ்டண்ட் மதக்காரர்கள் சொல்கின்றனர். மனிதன் சிந்தனை செய்யலாம்; ஆனால், அவன் வேத நூலை நம்பாமல்

இருக்கக் கூடாது; வேத புத்தகத்தைப் படித்து அதில் உள்ளவைகள் உண்மை அல்ல என்று சொல்லக் கூடாது. அவன் மீறி வேதத்தைப் பொய் நூல் என்று முடிவு கட்டுவானுனல், அவன் இறந்தபின் வேதனைக் குள்ளாக்கப் படுவான் என்று கூறுகின்றனர்.

அதாவது, "மனிதனே நீ வேத நூலைப் படி; அதன் பிறகு நம்பு; அப்படி நம்பவில்லையானல், இருளடைந்த நரகத்திற்குப் போ" என்றுதான் அவர்கள் கூறுகின்றனர்.

"வேத நூல் நேர்மையற்றதாயினும், நீதியற்ற தாயினும், நீ அதை நம்ப வேண்டும். அதில் கூறப்பட்டிருக்கும் அற்புதங்கள் நடைமுறைக்கு ஒவ்வாததாயிருந்தாலும், மறுக்கக் கூடாது. ஏற்றுக் கொள்ள வேண்டும். அதிலுள்ள சட்டங்கள் எவ்வளவு கொடுமையானவையாயினும் உன் உள்ளம் ஏற்றுக்கொண்டே தீர வேண்டும்." இவைதான் மாதா கோயில்கள் மக்களுக்கு அளிக்கும் சிந்திக்கும் உரிமை!

கடவுளுடைய கொடிய பார்வையாலும், அச்சத்தாலும் வேதநூலைப் படிக்கிறோம். நரகத்தின் பயமும், மயக்கம் மனதில் பதிந்த வண்ணம் வேத நூலைப் படிக்கிறோம்.

ஒரு புறத்தில் சாத்தான் கொடுந் துன்பம் என்னும் ஆயுதத்தைக் கையிலேந்தி நம் முன் நின்று மிரட்ட-மற்றொரு புறத்தில் கடவுள் மீளமுடியாத சாபம் என்னும்

கருவியைக் கையிலேந்திக் கொண்டு நிற்க—இந்த நிலையில் நாம் வேத நூலைப் படிக்கின்றோம்.

இவ்வித லட்சணங்களுடன் படிப்பவர்களைப் பார்த்துக் கோயில்கள் கூறுகின்றன: "நீங்கள் சுதந்திரமாக இருக்கின்றீர்கள். கடவுள் மிகவும் நல்லவர். அவர் உனக்கு எது வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமையை அளிக்கின்றார்" என்று.

போப்பாண்டவர்களும்; பாதிரிமார்களும், மதக் குருக்களும், ஏதுமறியாத ஏழை மக்களை நோக்கி," நீங்கள் பைபிளைப் படியுங்கள்; ஆனால், உங்களால் அதைப் புரிந்து கொள்ள முடியாது. அதனால்தான் அந்த உயர்ந்த நூலுக்கு "மறை" (வேதம்) என்ற பெயர் கூறப்படுகின்றது. நாங்கள் படிப்பதெல்லாம் உங்களுக்காகவே; அதனால் நீங்கள் நாங்கள் சொல்வதை ஏன் என்று கேட்காமல் நம்ப வேண்டும். நரகத்தின் திறவு கோலை நாங்கள் எடுத்துச் சொல்கிறோம். எங்களைத் தடுத்துப் பேசினால், கடவுளுடைய சிறையில் நிரந்தரக் குற்றவாளியாக இருப்பீர்கள்" என்று கூறுகின்றனர். இதுதான் கத்தோலிக்கக் கோயில்கள் அளிக்கும் சுதந்திரம்.

இத்தகைய பாதிரிமார்களும், வேதநூலோதிகளும், பைபிள் மனித அறிவுக்கும் மேலானது என்று கூறுகின்றனர். அவர்கள் கூறுவது உண்மையாயினும், அல்லவாயினும் சிறிதேனும் சிந்தனைக்கு இடமளிக்காது. இருந்தாலும் அதனை அப்படியே ஏற்றுக்

கொண்டு நம்ப வேண்டும். இதற்குப் பெயர்தான் மனிதனின் கடமை என்று அவர்கள் கூறுகின்றனர்.

உள்ளமெனும் உயர்ந்த கோயிலுள் கொலுவீற்றிருக்கும் சிந்தனை என்னும் தேவனை வெளியேற்றி விட்டு, அச்சம் என்னும் இருள் நரகத்திற்குத் தலை தாழ்த்தி வணங்க வேண்டும். இதுதான் மாதா கோயில்கள் கண்டு பிடித்த உண்மை.

இந்த நிலையில் சிந்தனையின் மதிப்பென்ன?

கடவுளின் சாபம் என்னும் தீயால் அறிவாலயம் வறண்ட பாலைவன மாகிறது.

சிந்தனை சக்தியைப் பாழாக்க இந்த முறையை மட்டும் பின்பற்ற வில்லை. வேறொரு வழியையும் கண்டு பிடித்தன இந்த மாதா கோயில்கள்!

அதாவது நிரந்தர வேதனை என்னும் பயத்தை மட்டும் சார்ந்தில்லாமல்; நிரந்தர இன்பம் என்னும் பரிசை அளிப்பதாகவும் ஆசை யூட்டின.

கோயில்கள்—குருமார்கள்—கூறுவதை யார் யார் நம்புகின்றார்களோ, அவர்களுக்கு மோட்ச உலகின் அழியாத இன்பத்தை வாங்கித் தருவதாக வாக்களிக்கின்றனர்.

அதாவது அந்தக் கோயில்கள், மக்களைப் பயமுறுத்திப் பார்க்கின்றன; இல்லை யென்றால் இலஞ்சம்

கொடுத்து ஏய்க்கப் பார்க்கின்றன. அவை எப்போதும் அச்சத்தையும், நம்பிக்கையையும் நாடுகின்றன.

அறிவுள்ள மனிதர்களை இயக்கும் ஒப்பற்ற ஒரு மதம், ஆணித்தரமான உண்மைகள் என்ற அடிப்படையின் மீதிருக்க வேண்டும்.

நம்பிக்கைக்கும், அச்சத்திற்கும் மனிதன் விண்ணப்பம் செய்வது ஒழிந்து; நீதிக்கும், உண்மைக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

மூளையின் அங்கங்களும், உணர்ச்சிகளும் ஒன்று சேர்ந்து ஆலோசித்து, தங்கு தடையின்றி, அச்சமின்றிப் பூரண சுதந்திரப் பேச்சில், மதத்தின் உண்மைகளையும், அது மக்களுக்கு வழங்கி யிருக்கும் உரிமைகளையும், ஆராய வேண்டும்.

ஆனால் கோயில்கள் என்ன கூறுகின்றன?

"நீ இயேசு கிறித்துவை நம்பு! நீ காப்பாற்றப் படுவாய்" என்று. இதை மனிதன் நம்பவில்லை என்றால் அவனுக்கு மோட்ச லோகம் இல்லை.

அதாவது நம்பிக்கைக்குப் பரிசு மோட்சம்.

அத்தாட்சி யொன்றுமில்லாமல் எதையும் நம்புவது கூடாது. நம்பிக்கை என்பது அத்தாட்சியின் பயனாகவே யிருக்க வேண்டும். வாயினால் சொல்லப்பட்ட எந்தப் பரிசும் சாட்சி யாகாது. அஃது அறிவு ஒளியை வழங்குவதில்லை. அஃது உண்மைகளை நிலைநிறுத்துவ

தில்லை. எதிர்ப்புக்குப் பதில் சொல்வதில்லை. சந்தேகங்களை நீக்குவதில்லை.

"நான் சொல்கின்றேன் நம்பு; நம்பினால் உனக்கு இந்தப் பரிசு கிடைக்கும்" என்று கூறுவது சரியா? நம்பிக்கைக்குப் பரிசு வழங்குவது நேர்மையா?

ஒரு மனிதன் நீதிபதிக்கோ, அல்லது ஜூரிக்கோ, பரிசுப் பணம் (இலஞ்சம்) கொடுத்துத் தன்பக்கம் தீர்ப்பளிக்கச் செய்ய முயல்கின்றானே அவன் குற்றவாளியாகிறான்.

ஏன்?

அவன் நீதிபதியை நீதியின்படி முடிவைக் கூற ஒட்டாமல் தடுக்கிறான். ஜூரியைச் சட்டப்படியும், உண்மையின் படியும் அவர்களின் உரிமையின் படியும் தீர்ப்புக்கூற ஒட்டாமல் தடைசெய்கிறான். ஆனால், இலஞ்சத்தின்படி தீர்ப்புக் கூற அவர்களைத் தூண்டுகின்றான்.

இதனால் நமக்கு நன்றாகத் தெரிகிறது இலஞ்சம் சாட்சியல்ல, என்று.

நம்பிக்கைக்கு மோட்சத்தை இலஞ்சம் தருவதாகக் கிறித்து வாக்குறுதி அளிப்பது, இலஞ்சம் கொடுத்துச் சாட்சியின் இடத்தைப் பறிக்கச் செய்யும் முயற்சியாகும்.

அவ்விதமே மோட்சப் பரிசுக்கு ஆசைப்பட்டுக் கண்ணை மூடிக்கொண்டு எவன் நம்புகிறானோ, அவன் தன் உள்ளத்தைப் பாழ்படுத்திக் கொள்கின்றான்.

"இந்த நில உலகின் மத்தியில் நூறு மைல்விட்ட முள்ள வைரம் ஒன்று இருக்கிறது. என் வார்த்தையை நம்புங்கள். என் வார்த்தையை நம்புகிறவர்களுக்கு நான் பத்தாயிரம் டாலர்கள் பரிசு வழங்குகின்றேன்" என்று ஒருவன் சொல்வதாக வைத்துக் கொள்ளுங்கள். அவன் சொன்ன வாக்குறுதியை ஆதாரமாகக் கருத லாமா?

நினைத்துப் பாருங்கள்! நூறு மைல் விட்டமுள்ள வைரம் இருப்பதை நாம் நம்பினால், பத்தாயிரம் டாலர். சந்தேகித்தால் கிடையாது. இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ளுகிறோம். டாலர் தேவை யுள்ளவர்கள் அவன் சொன்னதை நம்புவார்கள்? ஆனால் உண்மை யைத் தேடுபவர்கள் எப்படி நம்புவார்கள். அவனைப் பார்த்துப் பல கேள்விகள் கேட்பர்; அதைத் தாம் காண வேண்டும் என்று கூறுவர். இவ்விதம் உண்மையைத் தேடுவோர் செய்வர்.

அறிவுள்ள மக்கள் நிச்சயமாகப் பரிசு கேட்க மாட்டார்கள்; கொடுத்தாலும் ஏற்க மாட்டார்கள். உண்மை விளக்கம் தான் அவர்களுக்குத் தேவை.

ஆனால்;

கபடர்கள், பொய்யர்கள், உண்மையை விரும்பாத வர்கள்தான் பணத்தை (இலஞ்சத்தை) விரும்பு வார்கள்.

புதிய ஏற்பாட்டின்படி கிறித்து, நம்புகின்ற உயிர்களுக்குப் பரிசு வழங்கினுர். அந்த உறுதி அளிக்கப்பட்ட பரிசு ஆதாரத்தின் இடத்தைப் பறித்துக் கொண்டது. ஆனல், அவர் உறுதி மொழி அளித்தபோது, வீரம் பொருந்திய உயிரை, சுதந்திர வாழ்வை விரும்பிய உயிரை, இயற்கைத் தன்மை பொருந்திய, மேலான ஒழுக்க மிக்க உயிரை மறந்துவிட்டார்; அறிந்தும் அறியாம லிருந்து விட்டார்.

நம்பிக்கைக்குரிய பரிசு மோட்சம் என்று கூறுவது, அறிவுச் சுதந்திரத்திற்கு ஒவ்வாதது - புறம்பானது.

ஆதாரம் தான் நம்பிக்கைக்கு உறவு என்று எண்ணுகிற எந்த மனிதனும் நம்பிக்கைப் பரிசு மோட்சம் என்று கூறவில்லை.

மனிதர்களுடைய உயிர்கள் நம்பிக்கையால் தான் காப்பாற்றப் படுகின்றன என்று சொல்லப் படுகின்ற மதக் கொள்கைகள் அனைத்தும் இன்னல் விளைவிப்பவை.

அத்தகைய மதக் கொள்கைகள் நீதியின் உணர்ச்சிகளை மந்தப் படுத்துகின்றன. கடமை, நேர்மை ஆகியவற்றின் உண்மை எண்ணத்தை அழிக்கின்றன.

உண்மை, மனிதனை நம்பச் சொல்லுகிறபோது, அவன் ஆதாரத்தைக் கேட்கிருன். உண்மை மனிதன் வேருருவனை நம்பச் சொல்லும்போது ஆதாரத்தைக் காட்டுகின்ருன்.

அத்துடன் இஃது முடியவில்லை.

நம்பவில்லையேல், நிரந்தர துன்பம் அடைவாய் என்று அச்சுறுத்திய போதும், நம்பினால் நீங்காத இன்பம் அடைவாய் என்று ஆசை காட்டியபோதும், "ஆதாரம் இல்லாமல் நம்ப மாட்டேன்" என்று கூறியவர்கள் அதிகரித்தனர்.

அதனால், அவர்களை அடக்கக் கோயில்கள் வேறு வழியைக் கண்டுபிடித்துக் கையாண்டன.

கோயில்கள் கூறியவற்றை ஆதார மில்லாமல் நம்ப மறுப்பவர்களையும், கோயிலின் தர்ம விரோதிகளையும் நோக்கி, "உங்களை அந்த உலகத்தில் கடவுள் நிரந்தர தண்டனைக் குள்ளாக்குவார் என்பது மெய்யென்றாலும், நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பும் வரையில் உங்களைத் துன்புறுத்துவோம்" என்றும் கூறின.

பேப்பாண்டவர்களாலும், பாதிரிகளாலும், வேத நூலோதிகளாலும் நடத்தப் படுகின்ற மாதாக்கோயில்களின் உறுப்பினர்கள், என்ன செய்தனர் தெரியுமா?

அவர்களுக்கு அருகில் வசிக்கின்ற நம்பிக்கை யற்றவர்களைப் பிடித்துக் குகைளிலே அடைத்தனர்; பாறைகளில் கட்டினர்; அவர்களுடைய எலும்புகளை நொறுக்கினர்; நாக்குகளைத் துண்டித்தனர்; கண்களைப் பிடுங்கினர்; உயிரோடு அவர்களின் தோலை உரித்தனர். அவர்களுடைய உடம்புகளைத் தீயிலிட்டுப் பொசுக்கினர்.

நிரந்தர துன்பம் என்ற சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டால்தான் இந்தக் கிறித்துவக் காட்டுமிராண்டிகள் இத்தகைய கொடுமைகளைக் கூசாமல் செய்தனர்.

நம்பிக்கைக்குப் பரிசு மோட்சம் என்று அவர்கள் நம்பினார்கள். இத்தகைய நம்பிக்கையால்தான் அவர்கள் சுதந்திரச் சிந்தனைக்கு விரோதிக ளாகவும், சுதந்திரப் பேச்சுக்கு எதிரிக ளாகவும் மாறினார்கள்.

மனசாட்சியைப் பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. ஆன்மீக உண்மையைப் பற்றி ஒரு சிறிதும் எண்ணுவதில்லை. மனிதனின் மனிதத் தன்மையைப் பற்றிக் கடுகளவும் கருதுவதில்லை.

எல்லாக் காலங்களிலும், அநேக மதக் குருக்கள், இதய மற்றவர்க ளாகவும், இரக்க மற்றவர்க ளாகவும் இருந்தனர்.

அவர்களை நம்பாதவர்களை நிந்தனை செய்தனர்; அவர்களுக்குத் தொல்லை கொடுத்தனர். அவர்கள் தோல்வி யடைந்தபோது, மெதுவாக நகர்ந்து சென்று முணுமுணுத்தார்கள்; ஆனால் வெற்றி யடைந்தபோது, கொலை செய்தார்கள்.

இரக்கம் என்னும் அழகிய மலர் அந்த மதக் குருமார்கள் உள்ளங்களிலும், மூளையிலும் என்றும் மலர்ந்ததே கிடையாது.

ஆனால் இப்போது அவர்கள் நீதியைக் கடந்து செல்ல முடியாதவர்களா யிருக்கின்றனர். இன்று அவர்

கள் கொடுங்கோலர்களா யில்லை. பாவம்! அவர்கள் அந்த சக்தியை இழந்து விட்டனர். இருந்தாலும், இன்றும் அவர்கள் முடியாதவைகளை முடிக்கவே முயல்கின்றனர்.

அவர்கள் இன்று தங்களுடைய ஜோபிகளில் முட்டாள்தனம் என்னும் செல்வத்தை நிரப்பிக் கொண்டு தங்களைப் பெரும் பணக்காரர்கள் என்று கருதிக்கொண் டிருக்கின்றனர்.

அவர்கள் தங்கள் மூளைகளில் மாசுகளை நிரப்பிக் கொண்டு தங்களை அறிவாளிகள் என்று எண்ணிக் கொண் டிருக்கின்றார்கள்.

அவர்கள் கற்பனைகளாலும், கட்டுக் கதைகளாலும் தங்களைத் தேற்றிக் கொள்ளுகின்றனர்.

அவர்கள் புனைந்துரைகளிலும், மோசடிகளிலும் நம்பிக்கை வைக்கின்றனர்.

அவர்கள் தங்கள் உள்ளங்களைப் பூதங்களுக்கும், பிசாசுகளுக்கும் கொடுத்து விட்டு, இல்லாத ஒன்றின் உதவியைத் தேடி யலைகின்றனர்.

அவர்கள் தங்களுக்கு எஜமான் என்றுஓர் அரக்கனை-கொடுங் கோலனை ஆகாயத்தில் நிறுத்தி வைத்து, தம் உடன் பிறந்த மனித வர்க்கத்தையும் அவனுக்கு அடிமைப் படுத்தி வைக்கவே முயல்கின்றனர்.

அவர்கள் தங்களின் அடிமைகளுக்குக் கெஞ்சும் நேர்மையைக் கற்பிக்கின்றனர். ஆனால், உண்மையான மனிதனின் ஆண்மையை வெறுக்கின்றனர்.

அவர்கள் சிந்தனையாளர்களை—பகுத்தறிவாளிகளை வெறுக்கின்றார்கள். அத்துடன் பழிவாங்கவும் அவர்கள் விரும்புகின்றனர்.

அவர்கள் ஆராய்ச்சியாளருடைய கைகளுக்கு, நரக மென்னும் கற்பனைத் தீயால் சூடேற்றுகின்றார்கள்.

நான் அவர்களுக்கு நரகம் இல்லை என்று காட்டுகிறேன். இவ்விதம் நான் செய்வதால் என்னைத் தாக்குகிறார்கள்; தூற்றுகிறார்கள்.

ஒரு உதாரணக் கதையை உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

"குளிர் காலத்தில் ஒருநாள் "ஒரேஸ் கிரீன்லே" என்பவர் நாட்டுப்புறத்திற்குச் சென்றார். ஏனென்றால் தானியம் சேமிக்க. அங்கு ஒரு நெருப்புச் சட்டியின் முன்னர் உட்கார்ந்து அவர் தன் மேற்சட்டையின் பித்தான்களை விலக்கி, கைகளை நீட்டினார். சிறிது நேரம் கழிந்ததும் அங்கே வேலை செய்கின்ற ஒரு சிறுவன் அவரைநோக்கி, "ஐயா! அந்தச் சட்டியில் நெருப்பில்லை" என்று உண்மையைச் சொன்னான். அதற்கு அவர், "அடேய் போக்கிரி என்ன சொன்னாய்? நான் உண்மையாகவே சூடு பெற்றுக்கொண் டிருக்கின்றேன்" என்றார்.

* * *

3

சமய சாத்திரங்கள் தான் உண்மையைக் காண மறுக்கின்றன. அவைகளைத் தவிர மற்ற சாத்திரங்கள் உண்மையைக் காணத் துடிக்கின்றன.

உண்மையைக் கண்டவர்கள், புகழ் என்னும் உயர்ந்த குன்றின் மீது வைக்கப்படுவர்.

மதக் கல்லூரிகளில் விரிவுரை நடத்தும் ஆசிரியர்கள், சமயக் கோட்பாடுகளுடன் பொருந்தி வராத ஓர் உண்மையைக் கண்டால், அதை அவர்கள் தைரியமாக எடுத்துக்கூறக் கூடாது. அந்த உண்மையை இரகசியமாகவே வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி யில்லையென்றால், அந்த உண்மையை மறுத்துப் பேச வேண்டும். அப்படி இன்றி உண்மையைத் தப்பித் தவறி அவர் கூறிவிட்டால், அவர் வகித்து வந்த பதவியை இழக்க வேண்டும்.

மதக் கல்லூரிகள் அறிவு வாய்ந்த உண்மையைக் குற்றம் என்று கூறுகிறது. கோழைத்தனத்தையும், கபடத்தையும் உயர்ந்த ஒழுக்கங்கள் என்று போற்றுகிறது.

அவர்களுடைய சமயக் கோட்பாடுகளுடன் ஒத்து வராத ஓர் உண்மையை, பொய் என்று சாதிப்பார்கள். அந்த உண்மையை எவன் கூறினானோ அவனைத் தேவ தூஷணை செய்தவன் என்று அவன்மீது குற்றப் பத்திரம் வாசிப்பார்கள். ஒவ்வொரு விரியுரையாளரும் உண்மையற்ற—அன்பற்ற காற்றைத்தான் சுவாசிக்கின்றனர்.

இந்த உலகில் நீதியற்ற—நேர்மையற்ற சாத்திரம் என்று ஒன்று உண்டானால், அது சமய மத சாத்திரங்கள் தான் என்று நிச்சயமாகக் கூறலாம்.

ஏனென்றால் அஃதொன்றுதான் நம்பிக்கையை அதுவும் கண்மூடித் தனமான நம்பிக்கையை ஆதாரமாக உடையது. எண்ணத்தின் ஆற்றலை இழக்கிறது. சிந்தனையின் சக்தியைப் பாழாக்குகிறது. உண்மையை எதிர்த்துப் போராடுகிறது.

கத்தோலிக்கக் கோயில்களி லிருந்த பெரிய பெரிய சமய சாத்திர நிபுணர்களும், உண்மையை எதிர்த்துப் போராடி வந்திருக்கின்றனர்.

அத்துடன் நின்றுவிடாமல் உண்மைக்கும், விளக்கம் சொன்னார்கள். "உண்மை என்பது மனித இனத்தின் விரோதிகளால் காட்டப்பட்ட பாதை; அஃது அழிவுப் பாதைக்கே கொண்டு செல்லும்." என்றனர்.

இவர்கள் மட்டுமா?

லூதர் முதல், நம் காலத்தில் வாழும் பழமைப் பித்து கொண்டவர்கள்; மதவாதிகள்; வேதமோதிகள்; ஏன்? பெரிய பெரிய புரோட்டஸ்டண்ட் மதவாதிகளும் உண்மைக்கு எதிரிகளாகவே யிருந்திருக்கின்றனர்.

எல்லா வைதிகர்களும், அவர்கள் வழிபடும் கோயில் களும் விஞ்ஞானத்திற்கு எதிரிகளாக இருந்தன.

வான சாத்திர வல்லுனர்களைக் குற்றவாளியாக்கிக் கைதிக் கூண்டில் நிற்க வைத்து வேடிக்கை பார்த் திருக்கின்றன நமது வைதிகக் கோயில்கள்!

நிலநூல் வல்ல நிபுணர்களைக் கொலைக்காரர்களாக்கி அவர்களைக் கொலைக்களத்திற்கும் அனுப்பி யிருக்கிறது இந்தக் கோயில்கள் !

உடலிலே ஏற்படும் வியாதிகளை நீக்கும் மருத்து வனை—உடற்கூற்று அறிஞனைக் கடவுளின் எதிரிகள் என்றும், கடவுளால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை வீழ்த்துவதற்கு முயல்கின்ற மனிதர்கள் என்றும் குறை கூறின இந்தக் கோயில்கள் !

உயிர்வர்க்க நிர்ணய வாதிகளையும்; இயற்கையின் வரலாற்றினை உரைப்பவர்களையும், புராதனப் பொருள் களை ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களையும், பழைய கல் வெட்டுகளைப் படித்து உண்மையை அறிய ஆசைப்படு வோரையும், நிலத்தைத் தோண்டி ஆராய்ச்சி நடத்து வோரையும் ஆலயங்களும், அதனை அலங்கரிக்கும் மத வாதிகளும் வெறுத்தனர்.

உண்மையைக் கண்டு பிடிக்க முயல்பவர்கள் புண்ணிய நூலாகிய பைபிளுக்கு விரோதமான—பொருந்தாத சில உண்மைகளைக் கண்டு பிடித்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவர்களுக்கு இருந்து கொண்டே வந்தது.

கிறித்துவர்கள் மற்ற மதங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் கூடாது. அப்படிப் படிப்பவர்களையும் எதிர்த்தனர், கிறித்துவ மத வாதிகள்.

"கிறித்துவ மதம் சிறுகச் சிறுக வளர்ந்து விரிவடைந்த தல்ல; அஃதோர் வெளியீடு என்றனர். கிறித்துவ மதம் எவ்விதமான இயற்கை சமயத்தோடும் எந்த விதத்திலும் தொடர்பு கொண்டிருக்க வில்லை" என்றும் சாதித்தனர்.

ஆனால் இன்று எல்லா மதங்களும் மொத்தத்தில் ஒரே தோற்றத்தி லிருந்து உண்டாயின என்பது சந்தேக மறத் தெரிந்திருக்கிறது. இருந்த போதிலும் வைதிக கிறித்துவ மதவாதி இந்தக் கண்கூடான உண்மைகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

ஏன் தெரியுமா ?

அவன் அவனுடைய சமய கோட்பாட்டை-கொள்கையைக் காப்பாற்றித் தீர வேண்டும்.

பாவம் ! அவர் ஒரு நேர்மையான பள்ளியில் பயில வில்லை. அவன் படித்த பள்ளியில் உண்மையைப் பற்றி அவனுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை; அதனால், அவன்

தான் உண்மையானவனுக இருக்க வேண்டும், உண்மை யைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதை அறிய முடிவ தில்லை.

அவன் பயனற்ற பள்ளியில், கண்ணை மூடிக் கொண்டு நம்புவதற்குக் கற்பிக்கப் பட்டது; அப்படி அவன் நம்பிய உண்மைக்கு எதிராகவும், வாதத்திற்கு எதிராகவும் கூடக் காப்பாற்றுவதற்குப் போதிக்கப் பட் டது. அவன் அவர்கள் காட்டிய வழியில் கண்ணை மூடிக் கொண்டு நடக்கின்முன்.

"பைபிள் கடவுளின் வார்த்தைகளின் உயிர்ப்பு" என்பதை நிரூபிக்க ஒரு சிறு அணுவளவான ஆதாரத்தை யும் காட்டக்கூடிய மதவாதி அகில உலகத்திலும் நிச்சய மாகக் கிடையாது என்று நான் சந்தேக மில்லாமல், தெளி வுடன் கூறுவேன்.

கருணை நூல் கட்டளை பெற்ற மனிதன் தான் எழு தினுன் என்பதற்கு ஆதாரம் என்ன?

சாலமான் பாட்டுக்கு ஆசிரியர் கடவுள் என்பதற்கு ஆதார மெங்கே யிருக்கிறது?

ஒரு மனிதனுகிலும் உயிர்ப்பிக்கப் பட்டதற்கு ஆதார மென்ன?

கிறித்துதான் கடவுள் என்பதற்கு ஆதாரம் எங்கே யிருக்கிறது?

நரக லோகத்திற்கும், மோட்ச லோகத்திற்கும் போகும் வழி எது? இவை இருப்பதாகக் கூறப்படுவதற்கு என்ன ஆதாரம்?

பல அற்புதங்கள் நிகழ்த்தப் பட்டனவாகக் கூறுகின்றனரே ஓர் அற்புதத்திற்கு மட்டுமேனும் ஆதாரம் காட்ட முடியுமா?

இவர்களால் காட்டவும் முடியாது; எந்த ஆதாரமும் இல்லை.

தேவதூதர்களுக்கு ஆதாரம் எங்கே? பேய்களுக்கும், பிசாசு - பூதங்களுக்கும் என்ன ஆதாரம்? இவற்றைப் பார்த்ததுண்டா? அல்லது தொட்டு உணர்ந்ததுண்டா? மனித உணர்ச்சிகளில் ஒன்றேனும் மேற்கூறியவை இருப்பதற்கு அத்தாட்சி தருமா?

மதவாதிகள் வெறும் வாய்ப் பேச்சுக்களைத்தான் உண்மை என்று நம்பி அவைகளைச் சார்கின்றனர். அவர்களுக்கு அத்தாட்சியே தேவையில்லை. அத்தாட்சிகளும் உண்மையில் இல்லை.

ஏன் தெரியுமா?

அவர்களின் உயிர் போன்ற அந்தப் புண்ணிய ஏடு, சிந்தனைக்கு அப்பாற் பட்டது; அத்தாட்சி தேவையற்றது என்று கருதி அதனிடம் உரிமை கொண்டாடுகின்றனர்.

அவர்கள், வாய்ப்பு - யூகம் - இசைவு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றார்களே ஒழிய, ஆதாரத்தைக் காட்டுவதில்லை.

இயேசுநாதர் வாழ்ந்த விதத்தையும், அவர் பேசிய ஒரு நிகழ்ச்சியையும் கூறுகின்றார்கள். ஆனால் இரண்டிற்கும் ஆதாரமே கிடையாது.

இயேசுநாதர் இறந்த பின்னர் உயிருடன் எழுந்தார் என்பதை எந்த ஆதாரத்தைக் காட்டி நிரூபிப்பார்கள்?

என்ற கேள்வியை நாம் கேட்டால், "இயேசுநாதர் எழுந்ததற்கு ஆதாரம் இந்தப் புத்தகத்தில் இருக்கிறது" என்று புத்தகத்தைக் காட்டுகின்றார்கள். ஆனால் அந்தப் புத்தகத்தை எழுதியவர் யார் என்று அவர்களுக்குத் தெரியாது என்கின்றனர். இதுவா ஆதாரம் காட்டும் முறை?

இன்று வரையில் நிகழ்ந்த அற்புதங்களை ஒன்றின் பின் ஒன்றாகவும் உறுதிபடுத்த முடியாது. ஓர் அற்புதத்தை நிலை நாட்டுவதற்கு ஒரு மனிதன் சாட்சி போதாது. ஒவ்வொருவனும் அந்த அற்புதத்தைக் கண்டு திருப்தி யடைய வேண்டும்.

"சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயேசுநாதர் செய்து காட்டிய அற்புதங்களினால் தான், இன்று கிறித்துவ மதம் உண்மையானது என்று நிலை நிறுத்தப் பட்டுள்ளது" என்று கூறுகின்றனர்.

அவர்களுடைய அறிவற்ற பிடிவாத வார்த்தைகளைத் தவிர மற்ற எதனுலும் இத்தகைய அற்புதங்கள் நிலையா யிருக்க முடியாது.

மதவாதிகள் தங்கள் கொள்கையை நிலை நிறுத்துவதற்காக, உண்மையை எதிர்த்து வெற்றி பெறுவதற்காக, தொட்டில் குழந்தைகளையும், குழந்தைப் பராமரிப்புச் சாலைகளையும் கவர்கின்றனர். அந்தச் சின்னஞ்சிறு குழந்தைகளின் தெளிவில்லாத அறிவில், மூடபக்தி என்னும் விதைகளை நடுகின்றனர். பச்சிளங் குழந்தைகளின் சிந்தனையைப் பாழ்படுத்துகின்றனர். அவர்களின் களங்கமற்ற அறிவை அசுத்தப் படுத்துகின்றனர்.

இவர்கள் இன்பத்தைத் துன்பத்தால் பயமுறுத்துகின்றனர். மெருகிட்ட புளுகுகளால், அறிவில் தாழ்ந்தவர்களைச் சமாதானப்படுத்தி விடுகின்றனர்.

மத சாத்திரத்தைப் பயிலும் மாணவன், குழந்தைப் பருவத்திலேயே, தாயின் மடியிலேயே மத போதனைகள் கற்பிக்கப்பட வேண்டும். ஆம்! அவன் எதையும் அறிவதற்கு முன்னர், மதப் புளுகுகள் அவன் அறிவுக் கழனியில் விதைக்கப்பட்டு, நடப்பட வேண்டும்.

அவன் யார் எதைச் சொன்னுலும், தர்க்கம் செய்யாமல் அவர்கள் சொல்வதைக் கேட்டு அப்படியே நம்ப கற்பிக்கப்பட வேண்டும்.

"தம்பி! நீ எதையும் சந்தேகிக்காதே; சந்தேகிப்பது கேவலமான தன்மை; எந்தக் கேள்விகளையும் கேட்காதே; எங்களைக் கேள்வி கேட்பது பெரிய பாவம்; நாங்கள் சொல்வதை நம்பு; அதுதான் நேர்மையான செய்கை; எங்கள் சொல்லின் மீது அவநம்பிக்கை கொள்ளாதே அது மன்னிக்க முடியாத குற்றம்" என்று அவனுக்குக் கற்பிக்கப் படுகிறது.

இவ்விதம் செய்வதன் மூலம் அந்த மாணவனின் அறிவு நஞ்சூட்டப்பட்டு, அசைவற்றதாக்கப் படுகிறது.

அந்த மாணவன் மதக் குருக்கள் கூறிய விஷயங்களைத் தவிர, எல்லாவற்றையும் பற்றிச் சிந்திக்கும் உரிமை உண்டு!

ஒரு சிறுவன் தாயின் பாதுகாப்பிலிருந்து ஞாயிறு பாடசாலைக்குப் போகிறான். அங்கே என்ன நடைபெறுகிறது?

அந்தச் சிறுவனின் வளரும் சிற்றறிவு அற்புதங்களாலும், ஆச்சரியங்களாலும் நிரப்பப் படுகிறது. இந்த உலகத்தைப் படைத்த கடவுளைப் பற்றிப் போதிக்கப் படுகிறது. அந்தக் கடவுள் வழங்கும் மோட்சம் என்னும் பரிசின் பெருமைகளைப் பற்றிப் பேசப் படுகிறது. அவரால் அளிக்கப்படும் தண்டனைகளையும் எடுத்துக் கூறப்படுகிறது. கடவுள் பைபிளின் ஆசான்; கிறித்து அவர் மகன் என்றும் மாணவர்களுக்குக் கற்பிக்கப் படுகிறது. பாவத்தைப் பற்றியும்,

அதை எப்படி நிவர்த்திப்பது என்ற முறைகளும் சொல்லப் படுகிறது.

பாவம்! அவன் என்ன செய்வான்?

கேட்டதை நம்புகிறுன். அவனுக்கு வெறும் வாய் வேதாந்தங்களைத் தவிர வேறு எந்தக் காரண காரியங்களையும் காட்டவில்லை. எந்த அத்தாட்சியும் அவனுக்குப் போதிக்கப்படவில்லை.

தப்பித் தவறி அவன் கேள்விகள் கேட்டுவிட்டால், ஏமாற்றப் பேச்சுக்களால் அவன் வாயை அடைத்து விடுகின்றனர். கொடுமைகளுக்கு உருவம் கற்பித்துக் காட்டி அவனை எச்சரிகின்றனர்.

ஒவ்வொரு ஞாயிறு - பாடசாலையும், நியாய விசாரணை செய்யு மிடம். ஆனுல் அங்கே குழந்தையின் மூளையைப் பங்கப் படுத்துகின்றனர்; துன்புறுத்துகின்றனர். அந்தக் குழந்தைகளுடைய உள்ளங்களை கத்தோலிக்க, புராட்டஸ்டண்ட் உருவங்களில் புகுத்துகின்றனர். அங்கே அவர்கள், மூலத்தை - தனிமையை - உள்ளத்தின் நேர்மையை அழிக்க எல்லாவற்றையும் செய்வார்கள். மதப் பள்ளியின் அழிவு வேலைகள் முடிந்து விட்டன.

இந்த மதப் பள்ளிக்கூடங்களில் வெள்ளை உள்ளத்துடன் குழந்தையாய் நுழைந்தவன் வெளியில் வரும்போது புரோகிதன், மதகுரு என்ற பெயருடன் வெளி வருகிறுன். அப்படி வெளிவருபவன் உண்மையை ஒரு

நாளும் தேடமாட்டான். உண்மையைத் தேடுவதல்ல நம்பணி என்று தெரிவான். அவன் கடவுளிட மிருந்து ஒரு வேதம் பெற்றுள்ளான். அந்த வேதத்திற்குப் பொருத்தமான மதக் கோட்பாடுகளைப் பெற்றுள்ளான். அதனால், அந்த வேதத்தைத் தழுவி, அந்த மதக் கோட்பாடுகளைப் பாதுகாக்க வேண்டியது அவன் கடமை. அந்த வேதத்திற்கு எதிரான எதையும் படிக்க மாட்டான். தன் மதக் கோட்பாடுகளுக்கு முரணானவைகளைப் படிக்க மாட்டான் என்பது மட்டுமல்ல; கேட்கவே மாட்டான்.

அவனுடைய மதத்தைக் காப்பாற்ற உண்மையான எல்லா மதங்களையும் எதிர்ப்பான். அவன் எப்போதும் தெளிவாக இருக்க மாட்டான். அப்படி யிருப்பது மிக மிகக் கடினமான காரியம். அவனுடைய மதக் கோட்பாடுகளில் நிரந்தர இன்ப துன்பங்களைப் பற்றிய அஞ்சத்தக்க உண்மைகள் இருக்கின்றன. அவை பொய்ம்மையை நம்புவதற்கும், மெய்ம்மையை மறுப்பதற்கும் அவனுக்குப் பயன்படுகின்றன.

ஆராய்ச்சி செய்வது, முடிவில்லாத ஆபத்து. எதையும் ஆதார மில்லாமல் நம்பமாட்டேன் என்று கூறுவது, முடிவில்லாத குற்றம். அந்தக்குற்றத்திற்கு முடிவில்லாத தண்டனை தான் கிடைக்கும். என்று கூறுகின்ற போது, அவன் நினைத்துப் பார்க்கின்றான். அவர்கள் காட்டிய அந்த பயங்கர நிபந்தனைகள் என்னும் நிழலைக் கண்டு அஞ்சுகின்றான். அவனுடைய தைரியம் மங்குகின்றது.

மனிதத் தன்மை அவனை விட்டு நழுவுகிறது. உடனே அவன் மனதில் அச்சம் குடியேறி விடுகிறது. அந்த அச்சத்தால் அவன் கூறுவது சரியானாலும், தவறானாலும் நம்புகிறான்.

"இவ்விதம் நாங்கள் கூறுவதைத் தயங்காமல், சந்தேகிக்காமல் நம்பினால் பாதுகாக்கப் படுவாய்; அப்படியின்றி நாங்கள் கூறியதைச் சிந்தித்தால்—ஆராய்ந்தால் ஆபத்துக் குள்ளாக்கப் படுவாய்" என்று அவர்கள் கூறுகின்றனர். இவைகளைத் தங்கள் தோழர்களுக்குக் கற்பிக்கக் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட போதகன்-தலைவன் என்று சொல்லிக் கொள்ளுகின்றனர்.

இந்த வைதிக மதக் குருமார்கள், நாம் வாழ்கின்ற நூற்றாண்டில் தோன்றிய உண்மையாளர்களை—பெரிய மனிதர்களை, சிந்தனையாளர்களை நிந்தித்துக் கொண்டுதானிருந்தனர்.

உலகத்திற்கு உண்மைகளை எடுத்துக் காட்டிய உயர்ந்த பூகோள சாஸ்திய நிபுணரான லையல் (Lyell) என்பவரை எதிர்த்துப் பேசினர்.

மனித இனத்தின் மிக உயர்ந்த அறிஞனான 'அம்லோல்ட்' (Humloldt) என்பவரை மதக் குருக்கள் வெறுத்துப் புறக்கணித்தனர்.

இந்த உலகம் பெற்றெடுத்த இயற்கை சாஸ்திர நிபுணன்—ஆழ்ந்த சிந்தனையாளன்—உண்மையின் மதிப்பை உணர்ந்த நீதிபதி—உண்மையைக் கண்டு

பிடித்த அதிசய மனிதன் "டார்வின்" (Darwin) என்பவரைக் கண்டு இந்தக் குருக்கள் நையாண்டி செய்தனர்.

ஒவ்வொரு வைதிகப் பிரச்சார மேடைகளிலும், உயர்ந்த விஞ்ஞானிகளையும், உலகில் அறிவொளியைப் பரப்பியவர்களையும் நிந்தனை செய்பவர்கள் இருந்தனர்.

மாதா கோயில்கள், விஞ்ஞானத்தின் எதிரிகள்; உண்மைச் சிந்தனையாளரின் விரோதிகள்; அவவைகள் இன்று நேற்றல்ல; பல நூற்றாண்டுகளாகவே விஞ்ஞானத்தின், சிந்தனா சக்தியின் முன்னேற்றத்தைத் தடுத்து வந்தன.

மதக் குருக்கள் தெளிந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் வருங்காலத்தின் முன்னறிவிப்பாளார்களாக வேண்டும். ஆனால், அவர்கள் ஒளியை வெறுத்து நாசத்தை வாழ்விக்கிற வௌவால்களும், ஆந்தைகளுமாவார்கள்.

தங்கள் எண்ணங்களை வெளியிடும் நேர்மை மிக்கவர்களை — உண்மையாளர்களை, கடவுளை நிந்தித்த குற்றவாளிக ளாக்குகின்றனர். உண்மையாளர்களின் வாயை அடைத்து விடுவதற்காக என்ன வேண்டுமானாலும் அந்தக் குருக்கள் செய்ய முற்படுகின்றனர். பைபிள் நிலைப்பதற்காகச் சட்டத்தின் உதவியை நாடி ஓடுகிறார்கள். எதிரிகளின் வாதங்களுக்குப் பதில் சொல்ல அவர்களுக்குத் தெரியா விட்டாலும், நீதி மன்றங்களின் மூலம் பதில் சொல்லவே விரும்புகின்றனர்.

இதற்குக் காரணம் என்ன வென்ருல், கோழைத் தனமும், கபடமும், தீய உணர்ச்சியும் அவர்களிடம் கலந்து இருபதுதான்.

வைதிகப் பிரசங்க மேடைகளிலிருந்து என் னென்ன உயர்ந்த உண்மைகள் வெளியிடப்பட் டிருக் கின்றன ? உலகத்தின் அறிவுச் செல்வத்தோடு இந்தக் கோயில்களும், திருச்சபைகளும் என்னென்ன சேர்த் திருக்கின்றன?

பல ஆண்டுகளுக்கு முன்ஞல், கிறித்துவ மதத் திற்கு இந்தக் கோயில்கள், அறிவற்ற—தத்துவமற்ற— மிருகத்தன்மை மிக்க சட்ட புத்தகம் ஒன்றைத் தந்திருக் கின்றன.

மனிதனை இரக்க முள்ளவனுகவும், நேர்மை யுள்ள வனுகவும் இந்தக் கோயில்கள் செய்தன என்று கூறிக் கொள்ளுகின்றன.

ஆனல் இந்தக் கோயில்கள் கூறியபடி நடந்திருக் கின்றனவா? உண்மையாளர்களை, தர்ம விரோதிகளாகக் கருதி வேதனைப் படுத்தி யிருக்கின்றன. பலருடைய விரல்களைத் திருகியும், சட்டம், தீக்கட்டை முதலிய வற்றை உபயோகித்துத் துன்புறுத்தியும் வந்தன. எந்த வைதிகக் கோயிலும் தன்னுடைய கதவுகளைத் துன் புறுத்தப்பட்ட உண்மைக்குத் திறந்ததே கிடையாது. இப்படி யிருந்தும் கோயில்கள் மனிதனை இரக்கமுள்ளவ னுகச் செய்ததாகக் கூறிக்கொள்ளுகின்றன !

அவர்கள் கூறுகின்றனர்கள், கோயில்தான் கல்வியின் நண்பனாக இருந்தன — இன்றும் இருக்கின்றன என்று!

நான் அதனை மறுக்கிறேன். கோயில்கள், கல்லூரிகளைக் கட்டியன. மக்களை கற்கச் செய்ய அல்ல; ஆனால் மதமாற்றம் செய்ய — தங்களுக்குக் காப்பாளர்களைத் தேடிக் கொள்ள, என்பதை நான் அறிவேன். அதனால் தான் நான் நிச்சயமாகக் கூறுகிறேன் கோயில்கள் கல்வி போதிப்பது தற்காப்புக்குத்தான் என்று!

எந்த வைதிக மாதாகோயில்களும் உண்மையாகக் கல்விக்காகக் கல்லூரிகளை நிறுவவில்லை. ஆனால், காட்டுமிராண்டித் தனத்திலிருந்த மனிதனைக் கத்தோலிக்கனாக மாற்றுவதற்குத்தான். ஒரு ப்ரொட்டஸ்டண்ட், கத்தோலிக்கர்களை ப்ராட்டஸ்டண்டாக மாற்றக் கல்வி நிலையங்கள் நிறுவப்படுகின்றன.

இந்தக் கத்தோலிக்கர்களும், ப்ரொட்டஸ்டண்டுகளும், உண்மை தெளிவும், ஆண்மையும், பொருந்திய மனிதர்களை உண்டாக்கும் கல்வியையும், கல்லூரிகளையும் எதிர்க்கின்றனர்.

கோயில்கள் மருத்துவ விடுதிகளைக் கட்டியிருப்பதாகக் கூறுகின்றனர் குருக்கள்; ஆனால் அவர்கள் கூறுவது உண்மையல்ல. மனிதனின் நோய் நீங்க வேண்டும் என்னும் நல்ல எண்ணத்தால் அவைகள் கட்டப்படவில்லை. மேலும், மனிதன் கிறித்துவனாக இருப்பதால்

மருத்துவ விடுதிகளைக் கட்டவில்லை: அவர்கள் மனிதர்களாக இருப்பதால்தான் கட்டினார்கள். அவர்கள் அதனைத்தர்மத்திற்காகக் கட்டவில்லை. ஆனால், தற்காப்புக்காகவே கட்டிக் கொண்டார்கள்.

ஒருவன் பெரியம்மை என்னும் நோயோடு ஒரு குருவினிடம் வந்தால், அவனை உள்ளேயும் விடமாட்டார், கொல்லவு மாட்டார். ஆனால் நிர்ப்பந்தத்தின் காரணமாக அவனுக்கு என்று ஓர் இடம் ஒதுக்குகின்றார். ஏன்? அவரைக் காப்பாற்றிக்கொள்ள, நோய் ஒட்டிக் கொள்ளாமலிருக்க. இதை நீ செய்கிறாய் இதற்காகவே வைத்திய விடுதிகள் ஏற்படுத்தப் பட்டன. இதற்கும், கிறித்துவ மதத்திற்கும் தொடர்பே யில்லை.

மேலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மன்னிக்கும் குணத்தை ஏற்படுத்தியது கோயில்கள் தான் என்று சொல்கின்றனர். இந்தக் கோயில்கள் மன்னிப்பைக் கற்றுக்கொடுத்தன என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் இந்தக் கோயில்கள் எந்தக் காலத்திலும் ஒரு எதிரியைக்கூட மன்னித்ததில்லை. தைரிய மிக்க உயர்ந்த சிந்தனை யாளர்களுக்கு எதிராக அநேக புளுகுரைகளைப்பேசி அவர்களின் வாய்மையை மறைக்க முயன்றனர். நேர்மையான எதிரியின் நியாயமான உண்மையைக் கோயில்கள் எப்போதும் சொன்னதில்லை. சொல்ல முயன்று மில்லை.

கோயில்கள் இயற்கையைக் கடந்துள்ள சக்தியைப் பற்றிப் போதிக்கின்றன. அவை தெய்வீகம் என்னும் செப்படி வித்தையில் நம்பிக்கை கொண்டுள்ளன.

காரணமின்றிக் காரியத்தையும், காரியமின்றிக் காரணத்தையும் நிகழ்த்துவதாகச் சொல்லப் படுகிற- இந்த உலகத்தைக் கட்டிக் காப்பாற்றுவதாகச் சொல்லப் படுகின்ற - பிரார்த்தனைகளால் தூண்டப் படுகின்ற- கடன்களால் (காணிக்கை) சமாதானப் படுத்தப் படுகின்ற - தன்னிடம் விசுவாசமாக இருந்ததற்காக மனிதர்களை இயற்கையின் செயல்களிலிருந்து காப்பாற்றுவதாகச் சொல்லப் படுகிற - கண்ணுக்குத் தெரியாத - அறிவால் அறிய முடியாத ஒரு பொருளிடத்தில் அவை நம்பிக்கை கொண்டுள்ளன.

உலக நிகழ்ச்சிகளின் நிரந்தர - பாரபட்ச மற்ற பொருத்தத்தைக் கோயில்கள் மறுக்கின்றன.

கோயில் என்ன நன்மை செய்தது?

சமாதானத்தைப் பிரச்சாரம் செய்ததாகச் சொல்லுகிறது. ஏனென்றால், அதன் முதன்மையாளன், "நான் சண்டையை யன்றிச் சமாதானத்தைக் கொண்டுவரவில்லை" என்று சொல்லுவதால்தான்.

கோயில்கள் குடும்பங்களைப் பாதுகாப்பதாகச் சொல்லுகின்றன. ஏனென்றால், அதன் முதன்மையாளன், மனைவி மக்களை விட்டொழிக்கின்றவர்களுக்கு நிரந்தர இன்பத்தை அளித்ததால்தான்.

அதுபோலவே உலகத்திற்கு உயர்ந்த தோழமையைக் கற்பித்ததாக அவை உரிமை கொண்டாடுகின்றன. அதுவும் சரியல்ல.

"நிரந்தர பழி" என்னும் கருவியால் அச்சுறுத்திய கிறித்துவின் பெயரால் அவை மன்னிப்பைப் பிரசாரம் செய்கின்றன.

குருக்களில் பலர் நேர்மையான முறையில், அறிவுத் துறையில் நம்பிக்கை உள்ளவர்களாக நடிக்கின்றனர். அவர்கள் எதையும் சட்டத்தின் துணைகொண்டு சாதித்து விடுவார்கள்.

அவர்களுக்கு அதிகார மிருந்தால்:—

ஆண்களும், பெண்களும் அனுபவிக்கின்ற உண்மையான இன்பங்களைத் தடுத்து விடுவார்கள். நூல் நிலையங்களையும், கண்காட்சிச் சாலைகளையும், கலைக் கூடங்களையும் கோயில்களாக மாற்றி அதில் அவர்கள் குடியிருக்க விரும்புவார்கள். வாரப் பத்திரிகைகளை அழித்திருப்பார்கள். சிறப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் பத்திரிகைகள் வருவதை அழித்தே தீருவர். அன்று கார்கள் ஓடுவதைத் தடுத்திருப்பார்கள். வேறு எந்தப் போக்குவரத்தும் நடைபெறாதபடி தடுத்திருப்பார்கள். எல்லா மக்களையும், பிரார்த்தனை செய்யவும், சங்கீதங்கள் பாடவும் கட்டாயப் படுத்தி யிருப்பார்கள்.

இந்த அன்பார்ந்த மதக் குருக்கள் இவை மட்டுமா செய்வர்; இவர்கள் திருச்சபை உடையவர்க ளல்லவா?

அதனால், "எங்கள் திருச்சபை யிருக்கும்போது அதற்கு எதிராக ஏன் நகரசபை; ஆலோசனை சபைகள் எதற்கு? வர்த்தக சங்கங்கள் அவசியமா? உங்களுக்குச் செல்வ மேன்? சுகபோக மேன்? உலக வாழ்வு ஏன்?" என்று எதிர்த்து இடிமுழக்கம் செய்வர்.

அவர்கள் வேறென்ன செய்வார்கள். டைரிஸ் (Direes) லாயரஸ் (Layarus) என்பவர்களைப் பற்றிப் பேசுவர். செல்வந்தர்களை நரக லோகத்திற்கு வழிகூட்டி யனுப்புவர். ஏழைகளை - பிச்சைக்காரர்களை மோட்ச லோகத்திற்குப் பயணப் படுத்துவர். அன்றி யும் செல்வனை நரகத்திற்கு உபமானமாகவும்,ஏழையைச் சொர்க்கத்திற்கு உபமானமாகவும் எடுத்துக்காட்டுவர். அவர்களுடைய திருச்சபைகள் செல்வம் கொழித்த தாயின், தங்கள் துப்பாக்கிகளை வேறு பக்கம் திருப்பு வார்கள்.

அவர்களுக்கு உண்மையான கல்வியிலே கடுகள வும் நம்பிக்கை யில்லை. அறிவு வளர்ச்சியிலே அவர்க ளுக்கு நம்பிக்கை யில்லை.

ஏனென்றால் அவர்கள் நம்பிக்கைக்குத் தலைவணங் கிப் பழகியவர்கள்; அச்சத்திற்கு மண்டியிட்டுப் பழக் கப்பட்டவர்கள்.

அவர்கள்தான் இப்படி யென்றால், மற்றவர்களை யும் அவ்விதமே செய்ய முயல்கின்றனர். அவர்கள் எவரையும் எண்ணுவதற்கு - சிந்திப்பதற்கு விடமாட்

டார்கள். ஆராய்வதற்கு அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் விரும்புவ தெல்லாம் எல்லாரும் எல்லா வற்றையும் கண்ணை மூடிக்கொண்டு நம்ப வேண்டும் என்பதுதான்.

எதையும் தயங்காமல் மயங்காமல் நம்புவது புண்ணியங்களில் தலைசிறந்தது; சந்தேகிப்பதும், ஆராய் வதும் பாவங்களில் படுமோசமானது என்பது அவர் களின் நம்பிக்கை.

இவர்கள் விஞ்ஞானத்தின் விரோதிகள்; அறிவு முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகள். பெரிய பெரிய சிந்தனைச் செல்வர்களை, உண்மையாளர்களை எள்ளி நகையாடுகின்றனர்.

புண்ணிய நூல் என்று அவர்கள் கருதும் பைபி ளுக்கு மாறுபட்ட எதையும் அவர்கள் மறுத்தார்கள். 'யோசுவா'வின் வான சாத்திரத்திலும், மோசேயின் நில நூலிலும் இன்னும் நம்பிக்கை வைத்துக்கொண் டிருக்கின்றனர். பழங்காலங்களில் நிகழ்ந்ததாகக் கூறப் படும் அற்புதங்களில் நம்பிக்கை வைத்துக்கொண் டிருக்கின்றனர். ஆனால் தற்கால விளக்கங்களை மறுக் கின்றனர். அதனால்தான் அவர்கள் உண்மையின் எதிரிக ளாகின்றனர். அறிவின் விரோதிக ளாகவும் கருதப் படு கின்றனர்.

இந்த உலகில் மக்கள் இன்பமாக வாழ நினைப் பதை அவர்கள் உலகபந்தம், பற்று, பாசம் என்றும்,

பாப காரியம் என்றும் கருதுகின்றனர். மேலுலக இன்ப வாழ்வை நினைத்தால் அதை நேர்மை என்றும், ஆன்மிக வாழ்வு என்றும் கருதுகின்றனர்.

ஒவ்வோரு வைதிகக் கோயில்களும் பொய்ம்மை, மாசு ஆகியவற்றின் மீது கட்டப்பட்டவை; ஒவ்வோரு வைதிகக் குருவும் அவன் அறியாததை - காணாததைப் பற்றிக் கூறுகின்றான். ஆனால் அறிய முடிந்ததை, காண முடிந்ததை மறுக்கின்றான்.

மதக் குருக்கள் அனைவரும் மூடபக்தி என்னும் வீதைகளைக் கையிலேந்தி மக்கள் மூளை என்னும் கழனிகளில் விளைவிக்கவே முற்படுகின்றனர். அவர்கள் சிறப்பாகக் குழந்தைகளின் அறிவை மயங்கச் செய்து, அவர்களின் சிந்தனையை மாசு படுத்துகின்றனர். குருக்கள், குழந்தைகளின் உள்ளங்களில் அச்சத்தை நிரப்புகின்றார்கள். அவர்கள் போதனைகள் என்ற பெயரால் ஆயிரமாயிரம் பேர்களின் அறிவை அழிக்கின்றனர்.

அவர்கள் தெளிவில்லாத கபடர்கள்; மக்கள் அறிவை அடிமைப் படுத்துகின்றனர். மதக் குருக்களின் போதனைகளால் மக்கள் தங்கள் பலத்தை வேறு வழியில் திருப்பிப் பாழாக்குகின்றனர். முடியும் காரியத்தைச் செய்யமாட்டேன் என்று அதைத் துறக்கின்றனர்; ஆனால், முடியாதவற்றிற்கு அவர்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர்.

அவர்கள் தெரியாதவற்றை வழிபாடு செய்கின்றனர்; பார்க்க முடியாதவற்றைப் பிரார்த்தனைகள் செய்கின்றனர். அறியாமைக்கும், அச்சத்திற்கும் நீங்காத அடிமைக ளாகின்றனர்.

இவர்களால், மூடபக்தி என்னும் பாம்பு ஊர்ந்து சென்று மக்கள் உள்ளங்களில் தன் நஞ்சு தோய்ந்த கூர்மையான பற்களைப் பதைக்கின்றது.

அந்த மூடபக்திதான் மனித இனத்தின் படுமோசமான எதிரி!

மூடபக்தி—ஒரு பிச்சைக்காரன்; பரதேசி; கொள்ளைக்காரன்; அதுமட்டுமல்ல கொடுங்கோலன்.

விஞ்ஞானம்—நன்மை புரிகின்ற நண்பன்; உண்மையாளன்.

மூடபக்தி, இரத்தத்தைச் சிந்துகிறது.

விஞ்ஞானம் ஒளி வீசுகிறது.

அன்பார்ந்த பிரசாரகர்கள் - அவர்கள் கூறும் படைப்பின் விளக்கம் - ஏடன் தோட்டம் - மண் மனிதன் – இலை நரம்புப் பெண் - நடக்கிற பாம்பு - பேசுகின்ற சர்ப்பம் – ஆகியவற்றை ஒழிக்க வேண்டும்.

அவர்கள் கூறும் ஆப்பிள் பழம் - மனிதனின் வீழ்ச்சி- வெளியேற்றம்- வாட்களோடு கூடிய தேவதைகளால் காக்கப்படும் மரம் - வெள்ளம் - மொழிகளின் குழப்பம் இவைகளை ஒழிக்க வேண்டும்.

அத்துடன், ஆபிரகாம் ஆண்டவனுக்கும், யாக் கோபுக்கும் ஏற்பட்ட யுத்தம் ஆகியவற்றையும் ஒழிக்க வேண்டும்.

யோசப் வரலாறு - எகிப்தியர்களால் அடிமைக ளாக்கப்பட்ட எபிரேயர்கள் - மேசேவின் வரலாறு - எரியும் புதர் - தடிகள் பாம்புகளாக மாறிய மகிமை - தண்ணீர் இரத்தமாக மாறிய அதிசயம் - தவளைகளின் அற்புதமான படைப்பு - ஆலங்காட்டில் பசுக்களின் கொலை - தூசிகள் பேன்களாக மாற்றப்பட்ட மாண்பு எல்லாம் ஒழிந்தாக வேண்டும்.

நாற்பதாண்டு பாலைவன வாசம் - சிவப்புக் கடல் பிளவின் மர்மம் - தரிக்க மறுத்த ஆடைகள், செருப்பு கள் - இஸ்ரேலருக் கருளிய வானுணவு - குயில்கள் - பாம்புகள் - மலையை நோக்கி யோடிய நீர் - மோசே யோடு எபகோவா பேசியது - பத்துக் கட்டளைகள் - மோசேயின் எதிரிகளை விழுங்குவதற்கு ஏற்பட்ட நிலத்தின் வெடிப்பு - அவை அனைத்தும் எடுத்து எறியப்பட வேண்டும்.

இந்த நல்ல பிரசங்கிகள், ஊதுகுழலால், பெரிய நரகத்தின் நெடுஞ்சுவர்களை இடித்து எறிய முடியாது என்பதை நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஜெப்தா (Jephthah) தன் மகளைப் பலியிட்டது கொடுமை - பகற்காலம் நீட்டப்பட்டதாகச் சொல்வது

பொய் - ஜோசுவா (Joshwa) வுக்காகச் சந்திரன் நிறுத்தப் படவில்லை - இறந்த 'சாமுவேல்' ஒரு சூன்யக் காரியால் எழுப்பப்படவில்லை - நெருப்பு இரதத்தால் ஒரு மனிதன் மோட்ச லோகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகச் சொல்லப்படுவது உண்மையல்ல - மேற்சட்டையை அடித்ததால் நதி பிளவு படவில்லை - ஒரு தீர்க்கதரிசியைப் பார்த்து நகைத்ததற்காக கரடி குழந்தைகளை அழிக்கவில்லை - ஒரு திரியும் தீர்க்கதரிசி ஆகாயத்திலிருந்து ஏதுமறியா மக்களை அழிக்க மின்னல்களைச் சேர்க்கவில்லை - அவன் மழையைப் பெய்விக்கவில்லை - இரும்பை மிதக்க விடவில்லை - கொள்ளைக்காரர்கள் பிரசங்கிகளுக்கு இடமும், உணவும் அளிக்க விடுதிகள் நடத்தவில்லை - ஒரு அரசன் குண மடைந்ததைக் காட்ட சூரியக் கடிகாரம் பத்து டிகிரிகள் பின்னோக்கி யோடியதில்லை. "ஏழேகல்" (Ezekiel) உணவு சமைப்பது எப்படி என்று கடவுளால் சொல் லிக் கொடுக்கப் படவில்லை - ஜோனா, மீன் வயிற்றில் பிரயாணம் செய்யவில்லை - பழைய ஏற்பாட்டிலுள்ள அற்புதங்கள் உருவங்கள் அல்ல; பாடல்கள் அல்ல - ஆனால் பழமைப் பொய்களாகும். இவைகளை நம்பி நல்ல பிரசங்கிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அன்புள்ள பிரசாரகர்கள், தகப்பனா ரில்லாமல் அற்புதக் குழந்தை பிறக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளக் கட்டாயப் படுத்தப் படுவார்கள்.

இறித்து வாழ்ந்தாரென்றால் நம்மைப்போல மனிதனாகத்தான் வாழ்ந்தார். அவர் மக்களில் பிசாசுகளைப் பிடித்துக் கொடுக்கவில்லை.

அவர் மண்ணாலும், உமிழ்நீராலும் குருடர்களுக்குப் பார்வை உண்டாக்கியதாகக் கூறுவது பொய்; அவர் அப்படிச் செய்யவில்லை.

அவர் சாதாரணச் தண்ணீரை உயர்ந்த திராட்சை ரசமாக மாற்றவில்லை; ஒன்றுமில்லாமல், அதாவது ஆதாரமில்லாமல் மீன்களையும், ரொட்டித் துண்டுகளையும் உண்டாக்கவில்லை.

அவர் நீர் மீது நடக்கவில்லை. அவர் யார் கண்களுக்கும் புலப்படாமல் மாயமாய் மறைந்திருந்ததில்லை. இறந்தவர்களை அவர் மீண்டும் எழுப்பியதில்லை; இறந்ததிலிருந்து அவர் எழுந்திருக்கவுமில்லை. அவர் வானலோகத்திற்கும் செல்லவில்லை.

இந்த உண்மைகளை அந்தப் பிரசங்கிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்விதமான மாசுகள் ஒழிய வேண்டும்; மாயை விலக வேண்டும்; மயக்கம் தெளிய வேண்டும்; தவறான கொள்கைகள் மாற வேண்டும்; அற்புதங்கள் அழிய வேண்டும்; கட்டுக் கதைகள் காதவழி யோடவேண்டும். ஆம்! இஃது அறிஞர்தம் உள்ளத்திலிருந்து அடியோடு ஒழிந்தாக வேண்டும்.

எனது அன்புள்ள மத போதகர்களே! நான் உங்களை என்ன செய்ய வேண்டுமென்று கூறுகின்றே னென்றால், "நீங்கள் இனிமேல் தயவுசெய்து உண் மையை வெளியிட வேண்டும்" என்பதுதான்.

நீங்கள் பஞ்ச ஆகமங்கள் மோசேவால் எழுதப் படவில்லை என்று சொல்லுங்கள். யாருக்குத் தெரியுமா? உங்களுடைய திருச்சபைகளுக்கும், திருச்சபை வாசிக ளுக்கும்.

மேலும் அந்த ஐந்து புத்தகங்களையும் எழுதியவர் யாரென்று அந்தத் திருச்சபைகளுக்குத் தெரியாது என்று நீங்கள் கூறுங்கள்.

கிறித்துவுக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நூல் எழுதப்பட்டதாகக் கூறுவது பொய் யென்று சொல்லுங்கள்.

ஜோசுவா, நீதிபதிகள், சாமுவேல், அரசர்கள், வரலாறுகள், வேலைகள், சங்கீதங்கள், சாலமோன் பாட்டுகள் இவைகளை எழுதியது யார் என்று யாருக் கும் தெரியாது என்று கூறுங்கள்.

நீங்கள் உண்மையா யிருங்கள்; உண்மையைச் சொல்லுங்கள்.

எஸ்தரைப் பற்றி எழுதியது யார் என்று யாருக் கும் தெரியாது என்று சொல்லுங்கள்.

சாலமோனுக்கு நெடு நாட்களுக்குப் பிறகுதான் மாதா கோயில்களைப் பற்றி எழுதப்பட்டது என்று சொல்லுங்கள்.

அநேக தீர்க்க தரிசனங்கள் உண்மையில் நடந்தேறவில்லை. பின்னர்த்தான் நடந்ததாக எழுதப் பட்டன என்று உரையுங்கள்.

தானியேல் முதலியவர்கள் அறிவிலிகள் என்று அவர்கட்குச் சொல்லுங்கள். கிறித்துவ வேதத்தை எழுதியவர் யார் என்று எவருக்கும் தெரியாது என்று சொல்லுங்கள். அத்துடன் கிறித்துவைப் பற்றி அவருடைய சமகாலத்தவனால் எழுதப்பட்ட ஒரு வரிகூட அந்த வேதத்தினுள் இல்லை, எல்லாம் அனுமானம், கற்பனை என்று அவர்களுக்கு எடுத்து விளக்குங்கள்.

நேர்மையா யிருங்கள்! உண்மையைச் சொல்லுங்கள்! அறிவை வளருங்கள்! உங்கள் உணர்ச்சிகளைப் பயன்படுத்துங்கள்! உண்மை என்னும் ஒளிவிளக்கை உயரத்தில் ஏற்றி வையுங்கள்!

மிக விரைவில், அதாவது இன்னும் சில வருடங்களில், பிரசங்க மேடைகளில், மதபோதகர்கள் இருக்க மாட்டார்கள். அவர்களுக்குப் பதில் உண்மையை உரைக்கும் உபாத்தியாயர்கள் இருப்பர். சிந்தனையாளர்கள் இருப்பர்; தைரிய மிக்கோர் இருப்பர்; நேர்மையாளர்கள் இருப்பர்; உண்மை மனிதர்கள் இருப்பர்.

அப்படி யிருந்தும் இன்னும் பழைய பொய் புளுகு களுக்கு மதிப்புத் தரவேண்டு மென்று மதக் குருக்கள் விரும்புகின்றனர்.

o o o

இந்த மதக் குருக்கள், இதை உணர வேண்டும். மத குருமார்கள் கூறும் கொள்கைகளும், கோட்பாடு களும்கற்பனைக் கட்டடம்தான் உண்மையல்ல என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் அவை களை விளக்கிக் காட்ட ஆதாரங்கள் கிடையாது. வாய் பந்தல் போடுவதைத் தவிர வேறு எந்தவிதமான உண் மையான ஆதாரங்களும் அவர்களிடம் இல்லை என்பதை யும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் எப்படித் தங்கள் சித்தாந்தத்தை நிறை வேற்றுகின்றனர் என்றால், வாக்குறுதிகளின் மூலமாக வும், பயமுறுத்தலாலும்தான். இதைத் தவிர அவர்க ளிடம் வேறொன்றும் கிடையாது.

பொருளின்றி சக்தியை நினைப்பது அரிது என்றும் சக்தியின்றிப் பொருளை அறிவது கடினம் என்றும் அவர் கள் அறிய வேண்டும்.

பொருளின் அல்லது சக்தியின் படைப்பு-அல்லது அழிவைப் பற்றி நினைப்பது முடியா தென்றும் அவர் கள் உணர வேண்டும்.

எல்லையற்ற நிரந்தரமான அறிவைப்பற்றி எண்ணு வது முடியாது என்றும், அதைப் போலவே பொருளின்

படைப்புகளைப் பற்றிச் சிந்திப்பதும் முடியாது என்றும் அவர்கள் அறிய வேண்டும்.

கிறித்துவனின் கடவுள் முடிசூட்டப்பட்டது அனுமானம்'—'யூகம்' என்று சொல்லுகிறார்கள்.

எங்கிருந்து, முடி சூடிக் கொண்டார்? எப்போது சூடிக் கொண்டார் என்ற கேள்விக்கு, ஒரு மனிதனும், மனிதர்களில் எவரும் நிச்சயமாகப் பதில் சொல்ல முடியாது. மனித அறிவால் கடவுளிருப்பை விளக்க முடியாது.

அன்புள்ளவர்களே! இருக்கின்ற வாழ்க்கைக்குப் பின்னால் நம்மால் போக முடியாது-நாம் இறந்து விட்ட பிறகு எந்த லோகத்தையும், வாழ்வையும் நாம் நிச்சயமாகப் பார்க்க முடியாது.

எல்லாக் கடமைகளும், அல்ல உதவிகளும், அறிவு அனைத்தும், அனுபவம் பூராவும் இவ்வுலக வாழ்க்கையேயாம்.

நாம், ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் பார்க்கின்றோம், இன்பத்தில் பெரும் பகுதி நடத்தையைச் சார்ந்திருக்கிறது என்று நாம் அறிவோம்.

எல்லாக் கடவுள்களும், மாய உருவங்கள் என்பதையும் தெரிவோம். இயற்கைக்கு மேலாய் ஒன்றுமில்லை என்று தெரிந்து திருப்தி யடைகிறோம்.

நம்பிக்கைக்கும், அறிவுக்கு முள்ள வித்தியாசம் நமக்குத் தெரியும்.

இங்கு, இந்த உலக இன்பத்தைப் பார்க்கிறோம். அனுபவிக்கின்றோம், அதனால் நம்புகிறோம். இனிமேல் இன்பத்தின்கரை காண்போம், ஆனால், நாம் அறியோம், சொல்லால் உரைக்கவும் முடியாது. ஆனால் நம்ப முடியும், இல்லையென்றால் கனவாகக் காணலாம்.

நிறைந்த இருளிலே நட்சத்திரம் பிரகாசிக்கிறது. நாம் யாரை விரும்புகின்றோமோ அவர்களின் கல்லறைகளின் மீது ஒளி பரவுகிறது. மங்கி மடிந்த அவர்கள் மீது நாம் தாழ்ந்து,

"இந்த வாழ்க்கைக்குப் பிறகு பெருமூச்சுகளில்லை; கண்ணீர் இல்லை; உடைந்த உள்ளங்களில்லை," என்று கூறுகிறோம்.

• • •

முடிவு

நாம் உண்மையாக இருப்போமாக! நேர்மையாக நடப்போமாக! நம்முடைய ஆன்மாவின் தூய்மையையும், நேர்மையையும் காப்பாற்றுவோமாக!

தொட்டிலிலேயே — அன்புள்ள தாயின் மடியின் மீதே, கல்வி போதனை ஆரம்ப மாகட்டும். அந்த அருமையான பள்ளியின் ஆசிரியையான தாய் நேர்மையானவளாய், உண்மைப் பற்றுடையவளாய் இருக்க வேண்டும்.

குழந்தைகளைப் பராமரிக்கும் இடம், பொய்ம்மைக்கும் புளுகு மூட்டைகளுக்கும் தாயகமாக இருக்கக் கூடாது. நேர்மையற்ற பைத்தியக்கார விடுதியாய் இருக்கவும் கூடாது.

பெற்றோர்கள் உண்மையின் மீது பற்றுடையவர்களாக இருக்க வேண்டும். தமது அறியாமையை அவர்கள் மறைக்கக் கூடாது. நேர்மை நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். உண்மை யல்லாத எதையும் நிரூபிக்க முடியாத எதையும்—விளக்கிச் சொல்ல முடியாத எதையும், உண்மையானவை என்று குழந்தைகளுக்குப் போதனை செய்யக் கூடாது.

குழந்தைகள் சந்தேகங் கொள்ளவும், எதனையும் விசாரிக்கவும், ஆராய்ந்து பார்க்கவும், காரணம் கேட்கவும் கற்றுக் கொடுக்கப் படவேண்டும்.

ஒவ்வோர் உயிரும், தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். பொய்யும், வஞ்சனையும், ஏமாற்றத்தையும், தவறுதல்களையும், எதிர்க்கவும், அவைகள் தன்னைச் சாராமலும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

மதப் பிரச்சார மேடைகளி லுள்ளவர்களோடும்; நம்பிக்கைக்கு அடிமையான அனைவரிடமும் பத்திரமாகவும், சர்வ ஜாக்கிரதையுடனும் இருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

சந்தேகங்களைத் தைரியமாக வெளியிடக் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும்.

கல்வியானது அறிவை வளர்ப்பதற்கும், மூளையை விருத்தி செய்வதற்கும், ஐம்புல உணர்ச்சிகளை வளர்ப்பதற்கும் உதவி புரிவதாய்த் திகழ வேண்டும்.

ஒவ்வொரு பள்ளியும் மனப் பயிற்சி சாலையாகவும், அறிவுப் போர்க்கள மாகவும் இருக்க வேண்டும்.

வாழ்க்கையின் போராட்டங்களுக்கு வேண்டிய சாதனங்களைக் குழந்தைகள் பள்ளிகளிலேயே பயின்று கொள்ள வேண்டும். எதையும் ஆராய்ந்து பார்க்காமல் நம்புவதும், முடத்தனமான பணிவும், மறுப்புரை யற்ற துணிவும் அடிமைகளின் நீதிகள். அறியாமையின்

குணங்கள். இவைகளினால், சுதந்திரிகளும் அடிமை ளாகி விடுவர்.

அறிவால் ஆராய்ந்து பார்க்க முடியாதபடி, உணர முடியாதபடி, தெரிந்து கொள்ள முடியாதபடி, பரிசுத் தத் தன்மை வாய்ந்ததும், புனிதத் தன்மை நிறைந்தது மான பொருள் உலகில் எதுவும் நிச்சயமாக இல்லை என்பது கற்பிக்கப் படவேண்டும்.

மாதா கோயில்கள் என்ன சொன்னாலும் நம்ப வேண்டிய அவசிய மில்லை. அதன் திரைகளை விலக்கி உண்மை எது? என்று கண்டுபிடிக்க வேண்டும். மதக் குருக்கள் எதைக் கூறினாலும், ஏற்றுக் கொள்ள வேண் டிய அவசிய மில்லை, அவர்களின் முகமூடிகளை விலக்கி உண்மை என்ன? என்று கண்டுபிடிக்க வேண்டும். மதக் கோட்பாடுகள் எதைக் கூறினாலும் நம்ப வேண்டிய அவசியமில்லை. அவைகளின் உரையைக் கிழித்து உண்மை என்ன என்பதை உணரவேண்டும். வேதநூல் கள் எதைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசிய மில்லை அதன் சுற்றுச் சுவர்களை இடித்து உள்ளே இருக்கும் உண்மையைக் கண்டுபிடிக்க வேண் டும். அதைப் போலவே எல்லா ஒதுக்கிடங்களையும், உயரங்களையும், ஆழங்களையும் ஆராய்ந்தும், பரிசோ தனை செய்தும், உண்மையைக் கண்டு பிடிக்கவேண்டும் இந்த உரிமை ஒவ்வொரு மூளையுள்ள மனிதனுக்கும் உண்டு!

இயற்கையென்னும் பிரம்மாண்டமான புத்தகம் எல்லோருடைய கண்களுக்கும் முன்னே திறந்து வைக்கப்பட வேண்டும். ஆனால், இந்த அரிய நூலை அறிவாளிகளும், நேர்மையாளர்கள் மட்டும்தான் வாசிக்க முடியும். துர்ரபிமானம் உடையவர்களுக்கு அந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் இருள் மயமாகவே யிருக்கும். மோசக்காரர்கள் அந்தப் புத்தகத்தைப் படித்து தப்பர்த்தம் பண்ணுவார்கள். குருட்டு அப்பாவிகள் அந்தத் தப்பர்த்தங்களை நம்புவார்கள். குருட்டு நம்பிக்கைக் கொண்டவர்களால் அந்த நூலில் ஒரு வரியையும் கூட வாசிக்க முடியாது.

ஆனால், அந்த நூலில்தான் எல்லா அறிவும் நிரம்பிக் கிடக்கின்றன. எல்லா உண்மைகளும் புதைந்து கிடக்கின்றன. சிந்தனையின் ஊற்றுக் கண்ணும் அந்த நூல் தான்.

இந்த நூலை எல்லாரும் படிக்க இருக்கும் உரிமைக்கு மனச் சுதந்திரம் என்று பெயர்.

இந்த நூலைப் பொறுத்த வரையில், அரசனும் ஆண்டியும் சமம்; போப்பும், பண்ணையாளும் சமம். ஆகவே இந்த நூலை ஒவ்வொருவரும் தனக்காக, சுயமாகப் படித்துப் படித்ததை உண்மையாக, அச்சமின்றித் தன் தோழர்களுக்குச் சொல்ல வேண்டும்.

இந்த நூலுக்குத் திருச்சபைகளிலோ, மதாசாரியர்களிடத்திலோ எந்தவிதமான மேற்கோள்களும் கிடை

யாது இயற்கையே—நாம் அறிந்த உண்மைகளே—அந் நூலின் மேற்கோள்.

உண்மை - அறிவற்றவர்களின் எஜமான் - சத்துரு; அறிவாளிகளின் அடிமை - நண்பன்.

அறியாமை பெற்றெடுத்த குழந்தைகளின் பெயர் கள்:— மர்மம், மூடபக்தி. வருத்தம், சங்கடம், பழி, அழிவு, வறுமை, மனிதத் தன்மை யின்மை முதலியன.

அறிவு ஒன்றுதான், ஒளியுடையது. அஃது அனைவ ரையும் நீண்ட இராஜ பாட்டைகளில் நடக்க வழி செய்கிறது. பெரும் மேடு பள்ளங்களைத் தாண்ட உதவுகிறது. இயற்கைச் சக்திகளை உணரவும், பயன் களை அனுபவிக்கவும் உதவுகிறது.

அந்த அறிவொளி ஒன்றுதான் மனித இனத்தை உயர்த்துவதற்கு - முன்னேற்ற மடையச் செய்வதற்குத் தகுதி வாய்ந்த தூண்டுகோல். அறிவை வளர்ப்பது உலகத்தை நாகரிக மடையச் செய்வதாகும்.

அறிவு, சிறகுள்ள பயங்கர அரக்கர்கள் நிறைந்த மேலுலகங்களை அழிக்கிறது. பேய்களையும், பூதங்களை யும் வெருட்டி யோட்டுகிறது. வஞ்சக பக்தர்களை ஓட்டு கிறது. இருள் மயமான இடங்களை ஒளிமய மாக்கு கிறது. அச்சத்தை ஒழிக்கிறது. ஆண்மையை வளர்க் கிறது.

இயற்கைக்கு அப்பால், ஏதோ ஒரு சக்தி இருப்ப தாகக் கூறுவது பொய். அதற்கு எந்த விதமான

ஆதாரமு மில்லை, என்பதை எல்லோருக்கும் போதிக்க வேண்டும்.

மரக்கட்டைகளால் செய்த உருவங்களையும், கல்லால் செதுக்கிய சிற்பங்களையும் கடவுள் என்று கருதித் தனது தலையை எவன் வணங்குகிறானோ, அவன் கற்பனைக் கடவுளை வணங்கும் மூடனாவான்.

அவன் அவ்விதம் தவறாக எண்ணிச் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும், அவனுடைய அறியாமைக்கும், அச்சத்திற்கும் அவனுடைய வழிபாடுகளே காரணமாகும்.

கடவுள் நம்பிக்கை, சாத்தான் நம்பிக்கை, பூதங்கள் நம்பிக்கை முதலியவை யெல்லாம் குழந்தைகளின் நம்பிக்கை போன்ற முட்டாள் தனமான நம்பிக்கையாகும்.

இயற்கை—சக்தி—உண்மை இவைகள் எந்த வழிபாட்டாலும் மாற்ற மடையாது. அவை வழிபாடுகளை ஏற்பதில்லை; புகழுரைகளைக் கேட்பதில்லை. விண்ணப்பங்களை விரும்புவதில்லை. உபவாசத்தையும், பலியையும் ஏற்பதில்லை. காணிக்கைகளையும் கருதுவதில்லை.

நிச்சயமாக இவற்றால் இயற்கைச் சக்திகளை அடக்க முடியாது; மாற்ற முடியாது.

இந்த உண்மையை எல்லோருக்கும் கற்பிக்க வேண்டும்.

இதில் அற்புதங்கள் இல்லை; மாய மந்திரங்கள் கிடையாது. சக்தியைச் சக்தியால்தான் வெல்ல முடியும். இந்த உலகம் இயற்கையால் உண்டானது என்ற உண்மைகளை உலக முழுவதும் எடுத்து இயம்ப வேண்டும்.

அன்புடையவர்களே!

மனிதன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். மனிதனைக் காப்பாற்ற - பராமரிக்க இயற்கைக்கு அப்பால் எந்தச் சக்தியும் நிச்சயமாக இல்லை. அந்த இயற்கை எவரையும் வெறுப்பதில்லை; யார் மீதும் இரக்கப்படுவது மில்லை. மனிதர்களைப் பற்றி அது அறியாது. ஆனால் அதன் சக்திகளை நடத்திக்கொண்டு தான் இருக்கிறது. எந்த நோக்கமு மில்லாமல் ஆக்குகிறது; அப்படியே வருத்தமின்றி அழிக்கிறது.

இதுதான் உண்மை! இதனை அனைவருக்கும் போதிக்க வேண்டும்.

உண்மை தான் பயன்படக்கூடிய மதம்; அந்த உண்மை என்னும் மதத்தின் மொட்டு, மலர், நிச்சயமாகப் பழுத்துப் பயன் தரும் என்று அனைவருக்கும் போதிக்க வேண்டும்.

போப்பாண்டவர்களும், மத கர்த்தர்களும், பாதிரிமார்களும், குருக்களும், புரோகிதர்களும் இந்த உலகத்திற்கும், மனித இனத்திற்கும் உபயோகப்பட மாட்டார்கள். அவர்கள் எதையும் ஆக்குவதில்லை. அவர்கள்

மற்றறவர்களுடைய உழைப்பினால் வாழ்கின்றார்கள். அவர்கள் பயந்தவர்களால் பராமரிக்கப் படுகின்றார்கள். அவர்கள் உண்மை உழைப்பாளிகளின் இரத்தத்தை உறிஞ்சுகின்ற கொள்ளைக்காரர்கள்.

ஒவ்வோர் ஆலயமும் பிச்சைக்காரர்களின் கட்டிடம். அதில் வாழும் ஒவ்வொருவரும் அச்சத்தாலும், பலாத்காரத்தாலும் சேர்க்கப்பட்ட பிச்சையால் வாழ்வு நடத்துகின்றார்கள்.

ஒவ்வொரு மாதா கோயில்களும், மோட்சம் என்னும் இன்பத்தையும், நரகம் என்னும் அச்சத்தையும் ஊட்டுகின்றன.

இவ்விதம் வாக்குறுதி தந்து, அச்சம் காட்டி அணைத்தும், பிச்சை எடுத்தும் வாழ்வது, மக்களிடம் ஒவ்வொரு கோயிலும் வாங்கும் "வரி" ஆகும். அந்த ஆலயங்கள் கூறுவதெல்லாம் "நம்பு—கொடு" என்பதேயாகும். இவையெல்லாம் மதத்தின் பெயரால் நடப்பவையே யாகும்.

இன்று உலகம் மாறி வருகிறது; புதிய சகாப்தம் உதயமாகி விட்டது. உலகிற்கு உபயோகமானதே சிறந்த மதம் என்ற உண்மை இப்போது தெரிந்து விட்டது. அந்த உண்மை மதத்தில் மக்களுக்கு நம்பிக்கை மலரத் தொடங்கிவிட்டது.

காடுகளை வெட்டி நிலமாகத் திருத்திக் கழனிகளை ஏற்படுத்திப் பயிரிட்டு உலகின் பசியைப் போக்கப்

படித்துக் கொடுத்தவர்கள் — பெரிய பெரிய நதிகளின் குறுக்கே அணை கட்டிய பெரியவர்கள்— நதிகளின் மீது பாலங்களைக் கட்டியவர்கள்—கால் வாய்களை வெட்டியவர்கள்—ரயில் பாலங்களை அமைத்த வர்கள்—கப்பல்களைக் கட்டிக் கடலிலே நீந்தவிட்ட நிபு ணர்கள்—எல்லையற்ற தேவைகளைத் தீர்த்து வைக் கின்ற நீராவி யந்திரங்களை, மின்சாரப் பொறிகளை உண் டாக்கியவர்கள்—தந்திகளையும், கம்பியில்லாத் தந்திகளை யும் கண்டுபிடித்தவர்கள் — தங்கள் சிந்தனையையும் அன்பையும் மின்சார ஒளியிலே புகுத்தி மின்சார விளக் குகளைக் கண்டு பிடித்தவர்கள்—உலகிற்கு உடையை அளிக்கின்ற கதிர்களையும் — நெசவியந்திரங்களையும் கண்டு பிடித்தவர்கள் — எதிர்காலக் குழந்தைகளின் அறிவை வளர்ப்பதற்கான பாடல்கள், கட்டுரைகள், உண்மைகள் அனைத்தையும் உலகத்தில் நிரப்புவதற்கு உதவிபுரிகின்ற 'அச்சியந்திரங்களைக் கண்டு பிடித் தோர்—மரத்திலிருந்தும், இரும்பி லிருந்தும் நாம் உப யோகிக்கக்கூடிய பொருள்களை மிக நன்ருகச் செய்யக் கூடிய வியக்கத்தக்க இயந்திரங்களைக் கண்டுபிடித்தோர் —வான மண்டலத்தை ஆராய்ந்து பார்த்து அதிலே மலிந்து கிடக்கும் நட்சத்திர மண்டலங்களையும்—கிரக மண்டலங்களையும் கண்டு பிடித்தோர்—மலைத் தொடர் களிலிருந்தும், அலைகளிலிருந்தும், உலகத்தின் வரலாற் றைக் கண்டு பிடித்த மனிதர்கள்—நோய்களை ஒழித்து, மனிதனின் வாழ்வு காலத்தை நீடிக்கச் செய்த மனிதர் கள்—உலகத்தை ஒளியால் நிரப்பிய தத்துவாதிகள்—

விஞ்ஞான சாஸ்திர நிபுணர்கள்—மனித உள்ளத்தைத் தம்முடைய எண்ணங்களால் மயக்கிய கவிகள்—மக்களுக்கு மகிழ்ச்சி யூட்டும் பாடல்களியற்றிய புலவர்கள்-இத்தான் துணிகளிலும், கற்களிலும் சித்திரத்தைச் செதுக்கிய சிற்ப நிபுணர்கள்—உலகத்தையே கலக்கிய உண்மைப் பிரசங்கிகள்-இசைக்குத் தம் உயிரை அர்ப்பணித்த இசைவாணர்கள்—தொழிலின் முதன்மையாளர்கள்—தொழில் உற்பத்தியாளர்கள் — நேர்மைக்காகப் போராடும் போர் வீரர்கள்—இவர்களை அனைவரும் உலகிற்கு உபயோகமான — உண்மையை நிலை நிறுத்திய உண்மை மனிதர்கள்.

இவர்கள்தான் நம்முடைய உண்மைக் குருமார்கள் —நேர்மையைப் போதித்தவர்கள்—ஞானத்தை ஊட்டியவர்கள்!

விஞ்ஞானத்தின் வெற்றிதான் நம்முடைய உண்மையான அற்புதங்கள்!

இயற்கை உண்மைகள் நிறைந்த புத்தகம் தான் நம்முடைய புனித நூலாகிய வேதம்!

ஒவ்வோர் அணுவிலுமுள்ள, ஒவ்வொரு நட்சத்திரத்திலுமுள்ள—வாழ்கிற—வளர்கிற—எண்ணுகிற—சிந்திக்கிற—நம்புகிற—வருந்துகிற-சக்திதான் நாமறிந்த உண்மைக் கடவுள்!

இவற்றைத் தவிர்த்து வேறு உண்மைகள் கிடையாது!

ஆதியில்லாத—அந்தமில்லாத—எல்லையற்ற—பரமாத்மாவை-கடவுளை நாம் நிச்சயமாக அறியமுடியாது. இஃது உண்மை!

இயற்கையைக் கடந்து-இயற்கைக்கு அப்பால் நம்மால் போக முடியாது. நாம் செய்ய வேண்டிய எல்லாக் கடமைகளும் நம்முடைய இயற்கை எல்லைக் குள்ளேயே அடங்கி கிடக்கின்றன.

ஆகவே, இந்த உலகத்திலேயே நம்முடைய எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். அதனால் அன்பைச் செலுத்தி உழைப்போம் வாரீர்! பொறுத்திருந்து உழைப்போம் வாரீர்! தைரியத்தையும், மகிழ்ச்சியையும் நிலை நிறுத்துவோம் வாரீர்! நன்மைகளைச் செய்திட வாரீர்! உண்மைகளை விளம்பிட வாரீர்! சிந்தனை செய்திட வாரீர்! சேர்ந்து வாழ்ந்திட வாரீர்! சுதந்திர வாழ்வு வாழ்ந்திட வாரீர்! "எதிர் காலத்தில் நம் குழந்தைகளுக்கு அமைதியை அளிக்கும், இன்பத்தை நல்கும்" என்று கூறி மகிழ்ந்திட வாரீர்! இவை யனைத்திற்கும் மேலான, உண்மையை—ஆன்மாவின் புனிதத் தன்மையைப் பாதுகாத்திடுவோம் வாரீர்!

* * *

இங்கர்சால் இன்மொழிகள்

அறிவு

அறிவு - ஏக ஒளி. ராஜவீதியில் நடக்கவும், மேடு பள்ளங்களைத் தாண்டவும், இயற்கைச் சக்தியை உணரவும் அந்த அறிவொளி நமக்கு உதவுகிறது. மனித சமூகத்தை உயர்த்துவதற்குத் தகுதியான ஏற்றமரம் அறிவே. மூளையை வளர்ப்பதும், உலகத்தை நாகரிகப் படுத்துவதும் அறிவே யாகும். பேய்களை விரட்டி, பூதங்களை யோட்டி, இருள் மயமான பிரதேசங்களை ஒளிமய மாக்குவதும் அறிவுதான். அச்சத்தை அகற்றுவதும், ஆண்மையை வளர்ப்பதும் அறிவு ஒன்றுதான்.

x x x

அடிமை

திருச்சபைகள், மடாதிபதிகள், மதகுருமார்கள், அரசியல் கட்சிகள், அரசர்கள், தெய்வங்கள் ஆகியவற்றிற்குக் கீழ்ப்படிந்து, பகுத்தறிவுக்குத் துரோகம் செய்பவன் அடிமை யாவான்.

* * *

மனித சரித்திரம்

அடிமைத்தனம், அநீதி, சித்திரவதை முதலியவைகளின் சரித்திரம்தான் மனித சரித்திரம். வெகு காலம் பாடுபட்டு அவற்றை ஒழித்த பிறகே மனிதன் முன்னேற்ற மடைந்தான்.

x x x

மனிதன்

அரசனுக்கும், பூசாரிக்கும், குருட்டு நம்பிக்கைக்கும், மிருக பலத்திற்கும் மனிதன் வெகுகாலம் இரையாக இருந்து வந்தான்.

x x x

சுதந்திர விரோதிகள்

சுதந்திரத்தின் விரோதிகள் மக்கள் முன்னேற்றத்திற்குத் தம்மாலான தடைகளை யெல்லாம் செய்துகொண்டிருந்தனர்.

x x x

போராட்டம்

மக்கள் உரிமையை ஒழிக்கப் பல விதமான தந்திரங்கள், சூழ்ச்சிகள், கொடுமைகள் கையாளப் பட்டன. இந்தப் போராட்டத்தில் குற்றவாளிகள் பரிசு பெற்றனர். நல்லொழுக்கமுள்ள நிரபராதிகள் தண்டிக்கப் பெற்றனர்.

x x x

பெற்ருேர்களுக்கு

பெற்ருேர்களே! உங்கள் குழந்தை உங்களிடம் பொய் வார்த்தை சொல்லிவிட்டால், அதனிடம் கோபப் படா தீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். "குழந்தாய்! நான் கூட உன்னைப் போலவே நூற்றுக் கணக்கான பொய் களைப் பேசி யிருக்கின்றேன்; ஆனல் அது நன்மை தர வில்லை. ஆகவே பொய் பேசுவது நல்லதல்ல" என்று இனிய மொழிகளால் அன்புடன் சொல்லுங்கள்.

• • •

நீங்கள் பெற்ற குழந்தைகள் ஒரு குற்றம் செய்து விட்டால், உடனே அதனைக் கையிலெடுத்து அணைத்துக் கொள்ளுங்கள். உச்சி மோந்து ஒரு முத்தம் கொடுங்கள். உங்கள் இதயத்தோடு அந்தக் குழந்தையின் இதயமும் சேர்ந்து அடிப்பதாக நினைக்கட்டும். நீங்கள் அந்தக் குழந்தையை உண்மையாகவும், மனப்பூர்வமாகவும் நேசிக் கின்றீர்கள் என்று அஃது உணரட்டும்.

• • •

சவுக்கடி அரசாங்கத்தின்மீது எனக்கு நம்பிக்கை யில்லை. நீங்கள் சவுக்கைக் கையி லேந்திகொண் டிருக்க - உங்கள் குழந்தை அதைக் கண்டு பயத்துடன் நடுங்க - அடி அந்தக் குழந்தையின் மேல் பட — அது துடிக்க - நீங்கள் அடிக்க - இந்த நிலையில் உங்களைப் 'போட்டோ' பிடிக்கச் சொல்லுங்கள். உங்கள் முகம் கோபாக்கினி கொட்ட - குழந்தையின் கண்கள் நீர் சொரிய - இருக்கும் காட்சி எப்படி யிருக்கும்? கட்டாயம் போட்டோ எடுத்துப் பாருங்கள். பின்னர் உங்களால் அடிக்கப் பெற்ற அந்தக்

குழந்தை இறந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங் கள். அதன் உடம்பு புதையுண்டபின், அந்தச் சமாதியின் அருகே சென்று உட்கார்ந்து கொள்ளுங்கள். நீங்கள் குழந்தையை அடித்தபோது எடுத்த போட்டோவையும், எந்தத் தசையை அடித்தீர்களோ அந்தத் தசை இப்போது மண்ணில் புதையுண்டு கிடப்பதையும் ஒப்பிட்டுப் பாருங் கள். உண்மை உங்களுக்கே விளங்கும்.

* * *

நான் குழந்தைகளை எப்படி நடத்துவேன் தெரியுமா? நான் இறந்துவிட்ட பின் என் சமாதியின் அருகில் என் குழந்தைகள் வந்து நின்று, "இந்த இடத்தில் நித்திரை செய்கிறாரே. அவர் யார் தெரியுமா? அவர் எங்களுக்கு ஒரு கணப்பொழுதுகூட வருத்த முண்டு பண்ணியதில்லை. அவர் வாயிலிருந்தோ – "ஐயோ!" - அஃது இப்போது மண்ணாகிவிட்டது. ஒரு கடுமையான வார்த்தைகூட வெளி வந்ததில்லை" என்று கூறக்கூடிய முறையில் நடத்துவேன்.

* * *

குழந்தைகளின் சிரிப்பு

இசைக் கருவியை எடுத்து இனிய இசையை மீட்டு பவனே! நான் உனக்குச் சொல்லுகிறேன், உன் முழுத் திறமையைக் கையாண்டு இனிய இசையை மீட்டலாம்; அந்த இசையை விட இனிமையாகவும் நீ பாடலாம். குழல் ஊதுவோனே! உன் இன்ப இசையைக் கேட்டு இளம் காதலர்கள் தன்னை மறக்கலாம். அதுமட்டுமல்ல! மண்ண கத்தோர் மட்டுமன்றி, விண்ணில் நீந்தி விளையாடும் மதி

யும் - அதன் கதிர்களும் உன் இசையைக்கேட்டுக் குளிர்ச்சி யடையலாம். ஆனால், ஓ கவிஞனே! குழலோனே! உங்களுடைய இன்ப இசைகளெல்லாம் ஒரு குழந்தையின் சிரிப்பொலிக்கு நிகராகுமா? அந்தச் சிரிப்பொலியின் முன் உங்களின் இனிய நாதங்கள் அபஸ்வரமாக வன்றோ கேட்கும். ஆம்! அந்தக் குழந்தையின் கள்ளமற்ற உள்ளத்தில் ஊறி எழும் மெய்ச் சிரிப்பு எவ்வளவு ஆற்ற லுடையது தெரியுமா?

• • •

விரும்புகின்றேன்

மனித சமுதாயத்தின் கொள்கைகள், ஆவல்கள், இவைகளை ஏற்றிக் கொண்டு - மனித குலம் என்னும் மூட்டையைச் சுமந்து கொண்டு செல்லும் கப்பலானது, மரணம், துன்பம், அழிவு ஆகியவற்றின் இராக்காலம் என்கிற ஆழத்தில் மூழ்க நேரிட்டால், அந்தக் கப்பலோடு நானும் மூழ்கிடவே விரும்புகிறேன். அதை விட்டு விட்டு, ஏதாவது வைதிகப் படகைப் பிடித்துக்கொண்டு எப்படி யாவது தப்பித்துக் கொள்ள வேண்டும் என்னும் கேவல புத்தி எனக்குக் கிடையாது. என்னை யார் நேசிக்கிறார்களோ அவர்களுடனும், நான் யாரை நேசிக்கின்றேனோ அவர்களுடனும் அந்தக் கப்பலோடு கப்பலாக மூழ்கிப் போகவே விரும்புகின்றேன்.

x x x

தனது குழந்தைகளை நிரந்தரமான துன்பத்திற்கு உட்படுத்துகிற பரம பிதாவான ஒரு கடவுள் இருப்பாரானால், அந்த மகா மகா கொடிய கடவுளோடு நான் மோட்சத்திலிருப்பதைக் காட்டிலும், நரகத்திலே வசிக்க விரும்புவேன்.

*　　*　　*

புரோகிதரே !

ஐயா புரோகிதரே! உங்களைத்தான் கேட்கிறேன், சமாதியின் நுழை வாயிலில் நின்று கொண்டு, நித்தியத்துவத்தின் நுழை வாயிலில் நின்று கொண்டு, மக்களின் எதிர்காலத்தைப் பயங்கர மானதாகவும், அச்சம் தரக்கூடியதாகவும் செய்ய உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? யார் அந்த உரிமையை உங்களுக்குத் தந்தது?

*　　*　　*

இவ்விதம் செய்யுங்கள்

தங்கள் குழந்தைகளை அதிகாலையில் எழுப்ப வேண்டியவர்கள் குழந்தையின் முதுகில் ஒரு அறை கொடுத்து எழுப்புவதை நிறுத்திக்கொண்டு ஒரு முத்தம் கொடுத்து எழுப்ப வேண்டும். இதைகூடச் செய்ய முடியாது என்று சொல்ல முடியுமா?

*　　*　　*

ஆறுதல் அளிக்கிறது

உலக வரலாற்றின் எந்தக் காலத்திலாவது, மக்கள் அனைவரும் தெய்வத் திருச்சபையின் வழியைப் பின்பற்றி நடந்திருப்பார்க ளானுல், அவர்கள் அனைவரும் மூடர்க ளாகப் போயிருப்பர். தனக்குத்தானே - அதாவது சுய மாகச் சிந்திக்கும் ஓர் உத்தமன் - அறிஞன் எல்லாக் காலங் களிலும் தோன்றி யிருந்து மூடர்களை எதிர்த்தது நமக்கு ஆறுதல் அளிக்கிறது.

* * *

அறிவு வளர்ச்சி

அறிவு வளர்ச்சி என்னும் பனிக்கட்டியி லிருந்து மலர்ந்த மணமிக்க மலர்களுக்கு, நாகரிகம், சுதந்திரம், நீதி, தருமம் என்னும் பெயர்களிட்டு அழைக்க நான் விரும்பு கின்றேன்.

* * *

நமது வழிகாட்டி

அச்சம் நமக்கு நல்ல வழியினைக் காட்டுமா? அல்லது அறிவு சிறந்த வழியைக் காட்டுமா? இந்த உலகம் உயிர் உள்ளவர்களால் நடத்தப்பட வேண்டுமா? இறந்து விட்ட வர்களின் இஷ்டப்படி நடக்க வேண்டுமா? தோழர்களே! சிந்தியுங்கள்! என்னைப் பொறுத்த வரையில் நான் எதையும் சிந்தித்துத்தான் நம்புவேன். எனக்கு அறிவுதான் வழி காட்டி! இவ்வுலகம் உயிருள்ளவர்களால்தான் நடத்தப்பட வேண்டும்! சவக்குழி சிங்காதன மாகுமா? பிணமா அரசனுகும்? மனிதன் சாம்பல் மீதா வாழ்க்கையை நடத்த வேண்டும்?

x x x x

அறிவுக் களஞ்சியம்

மூடநம்பிக்கை இருக்கிறதே, அஃது அடிமைத்தனம் பெற்றெடுத்த குழந்தை. சுய அறிவோடு சிந்தனை செய்தால் தான் நமக்கு உண்மை தெரியும். எல்லோரும் சுயமாக எண்ணும் உரிமை பெற வேண்டும். அத்துடன் நின்று விடாமல், எண்ணியதை எடுத்து வெளியே சொல்லும் உரிமையும் பெறவேண்டும். அந்த உரிமைகளைப் பெற்று விட்டால், ஒவ்வொருவருடைய மூளையிலிருந்தும் சிறந்த கருத்துக்கள் மூளைத்துத் தானே வெளிவரும். அன்றுதான் உலகில் அறிவுக் களஞ்சியம் நிறைந்து விளங்கும்.

x x x

மூடநம்பிக்கை

தெய்வத் திருச்சபைகளுக்கு அஞ்சி நடுங்கும் ஆண்களும், பெண்களும் இருக்கும் வரையில் - புரோகிதன் அடிக்கடி பயத்தை உண்டுபண்ணிக்கொண் டிருக்கும் வரையில் - அது இன்னது என்று புரியாவிட்டாலும், அதனை வணங்கிக்கொண்டு வரும் மக்கள் உள்ள வரையில் - தங்கள் சுய மரியாதையை இழந்து விடுவதுதான் மரியாதை என்று மக்கள் எண்ணிக்கொண் டிருக்கிற வரையில் - தேவ பீடங்களுக்கு ஆதிக்கம் இருக்கும் வரையில் - மக்கள் குலம் வெறும் புத்தக மொன்றைத் தொழுதுகொண் டிருக்கும் வரையில் - உலகில் அறிவை அடமானம் வைத்தவர்கள் தான் தோன்றுவார்கள். நாடோடிகள் கூட மூடநம்பிக்கை என்னும் கிழிந்துபோன அந்தக் கந்தல் துணிகளைத்தான் உடுத்திக்கொண்டு திரிவார்கள்.

x x x

பெண்கள்

பைபிள் ஒன்றுதான் தமது உரிமைகள் அத்தனையும் அளந்து கூறும் உயர்ந்த நூல் என்று பெண்கள் நினைத்துக் கொண் டிருக்கிற வரையில், அவர்கள் ஆண்களின் அடிமை களாய்த்தா னிருப்பார்கள்.

*　　*　　*

பைபிள்

பைபிள் ஒரு பெண்ணால் எழுதப்பட வில்லையே! அதில் பெண்கள் அவமானம் அடைய வேண்டிய விஷயங்களே நிரம்பிக் கிடக்கின்றன. பெண் மனிதனின் சொத்து என் றல்லவா கருதப் படுகிருள். "நீ என் தாய் என்ற பெய ரெடுத்தாய்? அது பெருங் குற்றம். ஆகவே மன்னிப்புக் கேள் என்றல்லவா கூறுகிறது.

*　　*　　*

பைபிள் எழுதியவருக்கு......!

நாகரிகம் வாய்ந்த ஒரு குடும்பத்தை இந்தப் பைபிள் காட்டுமா? உரிமை வாய்ந்த ஒரு அன்னை, அவளைச் சுற்றி உரிமையுடன் ஓடி விளையாடும் குழந்தைகள், அவளோடு உரிமையோடு பேசும் கணவன் இவர்க ளெல்லாம் பைபிளிலே உண்டா? கிடையாது! பைபிள் எழுதியவருக்கு இவைக ளெல்லாம் தெரியாது.

*　　*　　*

தெரியாது

குடும்பத்தின் ஜனநாயகத்தை அவர்கள் அறியமாட்டார்கள். அடுப்பங்கரையின் குடியரசு வாழ்வு அவர்கள் கண்டதில்லை. கண்டாலும், "அதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை' என்று கூறுவர். இந்தப் பெரிய மனிதர்களுக்கா குழந்தைகளின் உள்ளங்களைப் பற்றித் தெரியப் போகிறது? அது தெரியாதபோது உரிமைகளைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரிந்திருக்கும்? இவர்களுக்கு இவை தெரியாது!

* * *

தெரியும்

ஆனல் பலாத்காரத்தை எப்படி உபயோகிப்பது என்பது தெரியும்; சாட்டையை எப்படி உபயோகிப்பது என்பது தெரியும். இப்படிப்பட்ட இவர்கள் கொள்கை வகுக்கின்றனர். இவர்கள் வகுத்த கொள்கைகள் கோடிக் கணக்கான குடும்பங்களை மிருகத்தன்மை யுடையதாய் செய்துவிட்டன. குழந்தைகளின் கண்களிலே நீரை நிரப்பி விட்டன!

• • •

காத்திருங்கள்

உரிமையுடன் ஆணும் பெண்ணும் ஒரு தலைமுறைகூட இந்த உலகில் வாழ்ந்தது கிடையாது. இதற்கு ஒரு கொள்கையை நிர்ணயிக்கும் காலம் இன்னும் உதயமாகவில்லை. தோழர்களே! காத்திருங்கள்! அந்த நல்ல காலம் வரும்

வரையில் காத்திருங்கள் - விலங்குகள் உடைக்கப் படுகின்ற வரையில் காத்திருங்கள் - குகைகளைக் கோயில்களாகக் கருதாத வரையில் காத்திருங்கள் - முகத்தைச் சுளித்துக் கொண்டு மௌனியாய் இருப்பதற்கு ஞானத்தின் அடையாளம் என்று எண்ணப்படும் வரையில் காத்திருங்கள் - கோழைத்தனதிற்குப் பெயர் பக்தி என்று கூறப்படும் வரையில் காத்திருங்கள் - இறந்து போனவனுக்கு ஈடாக உயிருள்ளவனைக் கருதும் வரையில் காத்திருங்கள் - சவப் பெட்டியைவிடத் தொட்டில் உயர்ந்தது என்று எண்ணப் படும் வரையில் காத்திருங்கள் - பிறர் என்ன சொல்லுகிறார் கள் என்பதைப் பற்றி நினைக்காமல் நாமறிந்ததை, நாம் சொல்லும் உரிமை நமக்குக் கிடைக்கும் வரை பொறுத் திருங்கள் - உபதேசத்தின் இருப்பிடத்தில் ஆசிரியர்கள் அமரும் வரையில் பொறுத்திருங்கள் - பின்னர் உலகம் சுதந்திர மடையும். அதன் பிறகு நீங்கள் கொள்கைகளை வரையலாம். அதுவரை பொறுமையுடன் காத்திருங்கள்.

• • •

பயமும், தைரியமும்

மூளையைக் குழப்புவது பயம்; தைரியத்தின் பிறப்பு முன்னேற்றம். பயம் எதையும் நம்புகிறது; தைரியம் சந் தேகிக்கிறது. பயம் கீழே வீழ்ந்து வணங்குகிறது; ஊக்கம் நேரே நிமிர்ந்து சிந்திக்கிறது. பயம் பின்வாங்குகிறது; ஊக்கம் முன்னேறிச் செல்கிறது. பயம் அநாகரிகமானது; தைரியமே நவநாகரிகம். பயம், மாயத்திலும் சூனியத்தி லும் பேயிலும் பிசாசிலும் நம்பிக்கை கொள்கிறது. பயமே மதம்; தைரியமே அறிவு நூல்.

x x x

பழங்கால நீதிமுறை

மிருகபலமே அக்கால நியாயத் தீர்ப்புக் கூறும் கருவியாக இருந்தது. போர், தீ, தண்ணீர், குலுக்குச் சீட்டு, இவைகளின் மூலமே அவர்கள் விசாரணை நடத்தினர்கள். குற்றம் சாட்டப்பட்டவன், பழுக்கக் காய்ந்த இரும்புகளை எடுக்க வேண்டும். கை வெந்து போனல் அவன் குற்றவாளி. சிலரைக் கையும் காலும் கட்டி காட்டிலும், கடலிலும் எறிவர். அவர்கள் இறந்து போனல் குற்றவாளிகள். அவர்கள் சாகவில்லையானல், பேய்களின் அனுக்கிரகம் பெற்றவர்கள். இஃதே பண்டையக் காலத்து நீதி முறை.

x x x

சட்டம்

சட்ட மென்பது வளர்ச்சி - விஞ்ஞான சாஸ்திரம். எல்லா விஷயங்களிலும் சரியுமுண்டு; தப்புமுண்டு; நன்மையுமுண்டு; தீமையுமுண்டு. இது உலக இயல்பு. தெய்வ கட்டளை என்பதால் மட்டும் எதுவும் சரியாகிவிடாது. மதம் விலக்குவதினல் எதுவும் தப்பாகி விடாது. இயற்கையாகவே ஏராளமான குற்றங்கள் இருக்கின்றன. எனவே செயற்கை முறையினல் புதுக் குற்றங்கள் உண்டுபண்ணத் தேவையேயில்லை. பல நூற்றுண்டுகள் பழைய பேய்ச் சட்டங்களையொழிக்க எடுத்துக்கொண்ட முயற்சியினலேயே சட்டம் அபிவிருத்தி யடைந்தது.

x x x

உலகத்தில் ஒரு நன்மையுண்டு - அதாவது இன்பம். அதைப் போலவே ஒரு பாபமுண்டு - அதாவது சுயநலம். ஆகவே இன்பத்தைக் காப்பதற்கும், சுயநலத்தை ஒழிப்பதற்காகவுமே சட்டங்க ளெல்லாம் தோன்றி யிருக்கின்றன.

x x x

பேய்கள் உலகத்தை ஆண்ட காலத்து, இயற்கையில் சட்டமுண்டு என்று நம்பப்படவே இல்லை. பேய்களின் பொறுப்பற்ற கட்டளைகளே சட்டங்களாக மதிக்கப்பட்டன. அந்தக் கட்டளைகள் பகுத்தறிவுக்குப் பொருந்தக் கூடியனவே அல்ல. அக்கட்டளைகள் எதேச்சாதிகாரத்தின் விளைவே.

x x z

தண்டனை

சட்டங்கள் அறிவற்றவைக ளாகவும், ஆபாசமாகவும் இருந்தது போலவே தண்டனைகள் குரூரமாயும், மிருகத் தனமாயு மிருந்தன. ஓய்வு நாளில் வேலை செய்பவனுக்கும், மரண தண்டனையே விதிக்கப்பட்டு வந்தது. நியாய உணர்ச்சியை மனித இதயத்திலிருந்து ஒழிப்பதே அச்சட்டங்களின் நோக்கமாக இருந்தன.

x x x

அறிவுச் சுடர்

பல நூற்றுண்டுகளாக மக்கள் சமுதாயம் சிறைப் பட்டுக் கிடந்தது. சிறைச் சாரளங்களின் வழியாக அவ் வப்போது சில ஞான ஒளிகள் வீசின. அந்த ஒளிகளுக்கு விஞ்ஞான சாஸ்திரம் அபயமளித்தது. கடைசியில் விஞ் ஞான சாஸ்திர உதவியினுல் அறிவுச் சுடர் விருத்தி யடைந்தது.

x x x

அடிமைகளா யிருந்ததற்குக் காரணம்

மக்கள் உள்ளமும் உடலும் அடிமைப் பட்டுக் கிடந் ததே பண்டைக் காலம் இருள்மயமாக இருந்ததற்குக் காரணம். அந்தக் காலத்து சுதந்திரம் என்பதே கிடையாது உடலுழைப்பு கேவலம் என்று மதிக்கப்பட்டது. தொழி லாளி மிருகத்திற்குச் சமமாக எண்ணப்பட்டான். அறி யாமை உலகத்தை கவர்ந்து மூடியிருந்தது. குருட்டு நம்பிக்கைகள் மனிதனை அடக்கி ஆண்டன. வான மண்ட லத்திலே தேவ தூதர்களும், பூதங்களும், பேய்களும் உலாவிக்கொண் டிருந்தன. ஆத்மாவின் சிங்காதனத்தில் இருக்க வேண்டிய பகுத்தறிவு நாடு கடத்தப்பட் டிருந் தது. துறவிகளுக்கும், போர் வீரர்களுக்குமே மதிப்பு இருந்தது. போரும், மதமும் மக்களின் இரண்டு தொழி லாக இருந்து வந்தன. கைத்தொழில் அடிமையாகவும், வர்த்தகம் திருட்டாகவும் இருந்து வந்தது. கொலை யுத்த மாகவும், வஞ்சனை மதமாகவும் எண்ணப்பட்டன.

x x x

முக்கியமானது

விஞ்ஞான சாத்திர உண்மைகள் வெளியாக வெளியாக குருட்டு நம்பிக்கைகள் ஒவ்வொன்ருக ஒழியலாயின. மேக மண்டலத்துப் பேய்களும், பூதங்களும் மறைந்தன. ஒவ்வொரு இயந்திரமும் ஒவ்வொரு புதிய படிப்பினையைக் கற்பிக்கும் ஆசிரியனுக இருந்தது. உலகத்திலேயே கல்வி மிகவும் முக்கியமானது. அதிசயமான மாற்றங்களை உண்டுபண்ண வல்லது.

x x x

புரட்சிக் கருவி

அரிச்சுவடி புரட்சியைத் தூண்டும் கருவியாக இருக்கிறது. ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது ஒரு கோட்டை கட்டுவதற்கு நிகராகும். ஒவ்வொரு நூல் நிலையமும் முன்னேற்றப் போருக்குத் தேவையான கருவிகள் நிரம்பிய ராணுவ சாலையாகும்.

x x x

காரணஸ்தர்கள்

தைரியமான கருத்துக்களை வெளியிட்ட வீரர்களுக்கு வாழ்த்து கூறுகிறேன். நாகரிகம் முழுமைக்கும் அவர்களே காரணஸ்தர்கள்: குருட்டு நம்பிக்கையை உடைத்தவர்களும், உடைத்துக்கொண்டு இருப்பவர்களும் அவர்களே!

x x x

நாகரிகம்

உண்மையை அறிவதே நாகரிகம் என்று இப்போது நாம் நன்கு தெரிந்து கொண்டோம்.

x x x

முன்னேற்றம்

முன்னேற்றத்தின் முக்கிய பலன் சந்தோஷமே. மனிதனுக்கு மகிழ்ச்சி யளிக்கக் கூடியவைகள் எல்லாம் நல்லவைகளே; மேலானவைகளே. மக்களின் உடலையும் உள்ளத்தையும் விருத்தி செய்வன - நல்ல வீடுகள்; நல்ல உடைகள்; நலல உணவு; நல்ல சித்திரங்கள்; மனோகரமான சங்கீதம், நல்ல மூளை, நல்ல இருதயம் முதலியவைகளைப் பெற உதவி புரிவன - அறிவை விருத்தி செய்து அன்பைப் பெருக்கி நீதியுணர்ச்சியை வளர்த்து உதவி புரிவன - நல்ல கணவராகவும், நல்ல மனைவியாகவும், நல்ல மக்களாகவும், நல்ல பிரஜைகளாகவும் கடனாற்றக் கற்பிப்பன - ஆகிய அனைத்தும் சேர்ந்ததையே நான் உண்மையான முன்னேற்றம் என மதிக்கின்றேன்.

x x x

முன்னேற்றத்திற்கு உதவி புரிந்தவர்கள்

இயற்கைத் தடைகளை வெல்லுந் தோறும் மனிதன் முன்னேறிச் செல்லுகிறான். உழைப்பினாலும், சிந்தனைகளினாலும் இயற்கைத் தடைகளை வெல்ல முடியும். யாவற்றிற்கும் உழைப்பே அடிப்படை. உழைப்பின்றி - கடின உழைப்பின்றி - இடையறா உழைப்பின்றி முன்னேறவே

முடியாது. புதுநிலங்களைப் பண்படுத்தி உழுது, விதைத்து அறுவடை செய்யும் விவசாயிகளும், தீப்பொறி பறக்கும் உலையில் வேலை செய்யும் கொல்லர்களும். கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும், மாரிக் காலத்து மக்களுக்கு வெப்பங் கொடுக்க நிலக்கரி யளிக்கும் பாட்டாளிகளும், கடலில் காலமோட்டும் மாலுமிகளும், சுதந்திர கருத்துக் களை வெளியாக்கும் தீரர்களும், உலக முன்னேற்றத்திற்கு உண்மையாக உதவி புரிந்தவர்க ளாவர்.

* * *

சுதந்திர புத்தி யிருக்க வேண்டும்

முன்னோர்களால் ஏற்பட்ட நலன்களுக்காக நாம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்களே. எனினும், பழையன இக்காலத்துக்குப் பொருத்த மில்லாத வைகளா யிருந்தால் அவைகளை மறுக்கும் சுதந்திரப் புத்தி யும் நமக்கு இருக்க வேண்டும்.

* * *

பாட்டாளி

முன்னேற்றத்திற்கு உழைப்பே அடிப்படை என்பது ஒப்புக்கொள்ளப் பட்டால், உழைப்பாளி - பாட்டாளி சுதந்திமாக இருந்து தீரவேண்டும்.

* * *

இன்றுள்ள பிரச்னை

குறைந்த நேரத்தில் மிகுந்த வேலை செய்வதே இப்பொழுது முக்கியமான தொழிலாளி பிரச்னையாக இருந்து வருகிறது.

* * *

சுய நம்பிக்கை

சுதந்திர உழைப்பு நமக்கு செல்வம் தரும்; சுதந்திரப் பிரச்னை உண்மையை உணர்த்தும். மெதுவாக, ஆனால் உறுதியாக மனிதன் பழமைக் கட்டிலிருந்து விடுதலை பெற்று வருகிறான். சுய நம்பிக்கை கொள்ள அவன் தெரிந்து கொண்டான். பேய்களை, பிசாசுகளை, பூதங்களை அவன் வெறுக்கத் துவங்கிவிட்டான்.

* * *

பதில் வேண்டும்

சமய வாதிகளின் போதனைகளும், கோட்பாடுகளும், கொள்கைகளும் இந்த இருபதாவது நூற்றாண்டு மக்களுக்கு திருப்தி அளிக்கின்றனவா?

ஆலயங்களில் மக்களுக்கு நம்பிக்கை யிருக்கிறதா?

பக்தன் என்ற காரணத்தினால் அர்ச்சகனுக்கு எந்த வியாபாரியாவது கடன் கொடுக்கின்றானா?

மடாதிபதி புரோகிதன் தீக்ஷதர் என்ற காரணத்திற்காக எந்தப் பாங்கராவது அவர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்பானா?

சமய வாதிகளின் சாசனங்களுக்கு காலணாவாவது விலை கிடைக்குமா?

சுருங்கக் கூறினல், சமய வாதிகளுக்கும் மதாச்சாரியர்களுக்கும் இப்போது மதிப்பிருக்கிறதா?

* * *

குருட்டு நம்பிக்கை

ஒருவன் சுயமாக எவ்வளவுக்கு சிந்தனை செய்கிருனே அவ்வளவுக்கு அவனுக்கு குருட்டு நம்பிக்கையில் நம்பிக்கையொழிந்திருக்கிறது.

* * *

பணிவு

அறிவு, பணிவையும் உடன் கொண்டு வருகிறது. புத்திசாலித்தனமான பணிவு அடிமைத்தனமாகாது. அறியப்பட்ட உண்மைகளுக்குக் கீழ்ப்படிவது அரசர் செயல்; அடிமைகள் செயலல்ல. அந்தப் பணிவு மனிதனுக்கு பெருமையை உண்டு பண்ணுகிறது; அவமதிப்பை உண்டு பண்ணுவதில்லை.

* * *

மனிதன் அறிந்து கொண்டான்

தான் சுதந்திரனய் இருக்க வேண்டுமானல் ஏனையோருக்கும் சுதந்திரம் வழங்கித் தீரவேண்டும் என்று மனிதன் கண்டு கொண்டு விட்டான். எஜமானனும் அடிமையே என்பதை அவன் அறிந்துகொண்டான். கொடுங்கோலனுங்

கூட அடிமை என்பதை அவன் உணர்ந்துவிட்டான். அரசாங்கம் இன்றியமையாத தேவை என்னும் காரணத்திற்காக ஜனங்களே அந்த அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்றும் எல்லா மக்களுக்கும் சம உரிமை உண்டென்றும், அதிகாரிகள் தெய்வாம்சம் உடையவர்களல்லவென்றும், ஆண்களும், பெண்களும் சமம் என்றும், வேதங்கள் தோன்றும் முன்பே மனிதர்கள் இருந்தார்களென்றும், மதம் மக்களின் மனோரதங்களின் ஒரு அம்சம் என்றும், எல்லா மதங்களும் மனித உற்பத்தியே என்றும், உலகத்தில் எல்லாம் இயற்கையென்றும், அற்புதம் அசம்பாவிதம் என்றும், ஆதியைப் பற்றியோ, அந்தத்தைப் பற்றியோ நமக்கு ஒன்றும் தெரியாதென்றும், அறிய முடியாத ஒன்றைப் பற்றி ஒருபொழுதும் அறிய முடியாது என்றும், தனக்கே தான் பொறுப்பாளியென்றும், எல்லோருக்கும் சிந்தனை செய்யும் உரிமை உண்டென்றும் மனிதன் அறிந்து கொண்டான்.

* * *

120713

எது மதம்?

உண்மை மதம் சுதந்திரமானதாகவே யிருக்க வேண்டும். உண்மையான மனச் சுதந்திரமின்றி மதமே இல்லை. சுதந்திர மில்லையானால் மூளை ஒரு சிறை; மனம் ஒரு குற்றவாளி. அடிமை மன்றாடுவான்; கெஞ்சுவான்; அடி பணிவான். ஆனால் அவனுக்குப் பக்தி செலுத்த முடியாது.

* * *

வடுவூராரின்

நவரசம் ததும்பும் நாவல்கள்

—o—

பூஞ்சோலையம்மாள்	...	2—0—0
முத்துலக்ஷ்மி	...	2—0—0
நங்கைமடவன்னம்	...	2—0—0
நீலலோசனி	...	2—0—0
தங்கம்மாள்	...	2—0—0
நவநீதம்	...	2—0—0
டாக்டர் சோணசலம்	...	2—0—0
மிஸ்டர் பூச்சாண்டி எம். ஏ.	...	2—0—0
மருங்காபுரி மாயக்கொலை	...	2—0—0
சிங்கார சூர்யோதயம்	...	2—0—0
துரைராஜா	...	2—0—0
ராஜேந்திர மோகன	...	2—0—0
சமய சஞ்சீவி	...	2—0—0
பாவாடைச் சாமியார்	...	2—0—0
சிவராமகிருஷ்ணன்	...	2—0—0
வஸந்தகோகிலம்	...	2—0—0
சொக்கன் செட்டி	...	2—0—0
கலியாணசுந்தரம்	...	2—0—0
பிச்சுமுத்துக்கோனன்	...	2—0—0
பச்சைக் காளி	...	2—0—0
மாயசுந்தரி	...	1—0—0

விபரங்களுக்கு:—

ஸ்ரீமகள் கம்பெனி
122, வரதாமுத்தியப்பன் தெரு
சென்னை-1

விற்பனை நிலையம்:—

M.S. ராமுலு கம்பெனி
286, சைனு பஜார்
சென்னை-1

Printed by The Srimagal Company, Madras-1